www.padippakam.com

SEMINAR

# Masalah Sosial Di Kalangan Belia India

# இந்திய இளைஞர்களிடையே சமூகப் பிரச்சனைகள்

Anjuran / ஏற்பாடு:

**Persatuan Pengguna Pulau Pinang (CAP)**
**பினாங்கு பயனீட்டாளர் சங்கம்**
**228 Jalan Macalister, 10400 Pulau Pinang**
**Tel:04-2293511 - Fax:04-2298106**

படிப்பகம்

www.padippakam.com

படிப்பகம்

www.padippakam.com




வணக்கம்!

சமூக பிரச்னைகள் இன்று சமூக நோய்களாக திகழ்கின்றது.

நாட்டின் மன்னரிலிருந்து, பிரதமர், அமைச்சர்கள் பொதுவாழ்வில் அக்கறையுடையோர், தனிப்பட்டவர்கள், ஆசிரியர்கள், பெற்றோர்கள் என பலரும் சமூக பிரச்னைகளைப் பற்றி பேசவும் விவாதமும் செய்ய தொடங்கிவிட்டார்கள்.

சமூக பிரச்னை ஒரு சமூகத்தின் பிரச்னை அல்ல. இன்று அது ஒரு தேசிய பிரச்னையாகிவிட்டது. அதுவும் இளைஞர்களிடையே ஆழமாக பதிந்துவிட்ட ஒரு நோயாக இருக்கின்றது.

சிறார்களிடையே ஆரம்பித்து இளைஞர்களிடையே தொடங்கி பெரியார்களிடம் முடியும் பலதரப்பட்ட சமூக நோய்களை குணப்படுத்துவதற்கு சரியான மருந்து என்ன?

பலர் நவீன மருத்துவத்தை கையாளுவதால்தான் இந்த நோய்களை குணப்படுத்த முடியவில்லை. பாரம்பரிய மருத்துவம் இந்நோய்களுக்கு சரியான மருந்து.

ஆம்!

பாரம்பரியத்திலிருந்து அதிக நவீன கலாச்சாரத்திற்கு செல்வதால்தான் கட்டுப்படுத்த முடியாத சமூக பிரச்னைகள் தலைவிரித்தாடுகின்றது.

சிறார்களிடையே காணப்படும் சைக்கிள் திருட்டு கல்வியில் நாட்டமின்மை, சிகரெட் புகைத்தல், கஞ்சா, சுற்றித்திரிதல், திருடுதல், பொய் சொல்லுதல் ஆகியவையும்

### இளைஞர்களிடையே :

சுந்திரமான உடலுறவு, போதைப்பொருள், எயிட்ஸ், சினிமா மோகம், கொலை, கொள்ளை, சுற்றித்திரிதல், டிஸ்கோ மையம், மது, மோட்டார் சைக்கிள் பந்தயம், பெண்களை கிண்டல் செய்வது, தற்கொலை

### பெண்களிடையே:

அழகு சாதன பைத்தியம், குடும்ப வாழ்க்கையை வெறுப்பது, சினிமா மோகம், விளம்பர கவர்ச்சி, தற்கொலை

### பெரியோர்களிடையே :

சூதாட்டம், வேலை செய்ய விருப்பமின்மை, மனைவியை அடிப்பது, குடும்ப பொறுப்பின்மை, மது அடிமை, சிகரெட் பைத்தியம், இரவு விடுதியில் நேரத்தை கழிப்பது, குழந்தைகளிடம் நேரத்தை செலவழிப்பதில்லை, லஞ்சம் என்று அடுக்கிக்கொண்டே போகலாம்.

பிரச்னைகளை சுட்டிக்காட்டுவது சுலபம்தான். ஆனால் இவற்றை அகற்றுவதற்கு வழிதான் என்ன என்பதை நாம் ஆராய வேண்டும்.

நமது இந்திய சமூகத்தில் காளான் போல் வளர்ச்சி கண்டு வரும் சமூக பிரச்னைகளை சிறுக சிறுக துடைத்தொழிப்பதற்காகவே இந்த வழிகாட்டிப் புத்தகம் கொண்டு வரப்படுகின்றது.

சிறுபான்மை சமூகமாக இருந்தாலும் சமூக பிரச்னைகளில் பெரிய பங்கு வகிக்கின்றோம்.

தேவையற்ற காரியங்களுக்கு நேரத்தையும் - பணத்தையும் செலவழிப்பது, சினிமா மோகம், மலிவு சாராயம், வன்முறை சம்பவங்கள், குடும்ப பிரச்னை, தற்கொலை, குடும்ப நல்லுணர்வு இல்லாமை, என்று பலதரப்பட்ட பிரச்னைகளை சிலந்தி வளைபோல் சிக்கிக்கொண்டிருக்கின்றன.

இவற்றிலிருந்து மீளமுடியாமல் நாம்



படிப்பகம்

www.padippakam.com

தவித்துக்கொண்டிருக்கின்றோம்.

திடீரென்று இந்த பிரச்னைகள் பூகம்பம் போல் வெடிக்க தொடங்கியதற்கு காரணம் என்ன?

இதுதான் இன்றைய கேள்வி.

பத்தாண்டுகளுக்கு முன்பு நாம் செய்ய தவறியது இன்று நம் கண் முன்னே நடந்துக் கொண்டிருக்கிறது.

அந்தத் தவறு நம்முடையதுதான்.

இந்தத் தவறு தொடராமல் இருக்க வேண்டுமென்றால் இப்பொழுதே நாம் செயலில் இறங்க வேண்டும்.

சிறு குழந்தைகளின் எண்ணத்தில் நல்ல - ஒழுக்கமான - பாசமிக்க - கடமை மிக்க - கருத்துக்களை வளர்க்க வேண்டும்.

பெரியவர்கள் உதாரணமிக்கவர்களாக திகழ வேண்டும். பெரியவர்கள் பாசமிகுந்த பெற்றோர்களாக திகழ வேண்டும்.

பெரியவர்கள் ஒழுக்கமுள்ளவர்களாக திகழ வேண்டும்.

பெரியவர்கள் வழிகாட்டிகளாகத் திகழ வேண்டும்.

பெரியவர்கள் செய்கின்ற தவறுகள்தான் சிறியவர்களை பாதிக்கின்றது.

அந்த பாதிப்பு ஒரு சமுதாயத்தின் எதிர்காலத்தையே சீரழிக்கின்றது.

ஆகவே, சமூகப் பிரச்னையை துடைத்தொழிப்பதற்கு அனைவரும் பாடுபடுவோம். முதலில் "என்னை நான் மாற்றிக்கொள்வேன்" பிறகு "என் குடும்பத்தையும் மாற்றுவேன்" என உறுதிமொழி எடுத்துக்கொள்வோம்.

மாற்றமும் - முன்னேற்றமும் நமது கைகளில்தான் இருக்கின்றது.

*எஸ்.எம்.முகம்மது இத்ரிஸ்*
*தலைவர்*
*பினாங்கு பயனீட்டாளர் சங்கம்*



பிறருக்கு உபதேசிப்பதை நீங்களும் கடைபிடியுங்கள்
*(இல்லையேல் நீங்கள் உபதேசிப்பதை யார் கேட்பார்கள்?)*



படிப்பகம்

www.padippakam.com

# ஆட்டமும் பாட்டமும் சோறு போடுமா?

அமைதியான சூழ்நிலையில் மன அமைதிக்கு ஆறுதல் கிடைக்கவும் உடற்சோர்வுகள் நீங்கவும் நிம்மதியான ஒரு பொழுது வேண்டுமென்றால் இன்பமான ஒரு இசையையோ அல்லது கர்நாடகக இசையையோ கேட்டால் மகிழ்ச்சிக்கு எல்லையே இருக்காது.

அந்த வகையில் இசை மனிதனுக்கு அவசியம் என்று சொல்லிவிட முடியாது. ஆனால் ஓய்வாக இருக்கும் பொழுது போக்கிற்காக அதை கேட்டு வைப்பதில் தப்பேதுமில்லை.

அப்படி தேர்வு செய்கின்ற இசை அல்லது பாடல் கருத்துள்ளதாக மன உணர்வுகளுக்கு கேடு விளைவிக்காதவைகளாக இருக்க வேண்டும். ஆனால் இப்பொழுது வருகின்ற இசை அல்லது பாடல்கள் எப்படிப்பட்டவை என்று நான் உங்களுக்கு சொல்லத் தேவையில்லை.

அண்மையில் கோலாலம்பூரில் நடைபெற்ற தேவா இன்னிசை இரவு பற்றி பல தகவல்கள், சர்ச்சைகள் நமது பத்திரிகைகளில் செய்திகளாக வெளியிடப்பட்டு வருகின்றன.

இந்த தேவா நிகழ்ச்சி பற்றி நமது செய்தித் தொடர்புச் சாதனங்களில் வெளியான விளம்பரங்களை பார்த்தபோது ஏதோ இந்த 20-ம் நூற்றாண்டில் நடக்கக்கூடாத ஒரு பெரிய சரித்திர நிகழ்ச்சி நடக்கப்போகின்றது என்று ஒரு மாயை ஏற்படுத்தப்பட்டது.


இந்த நிகழ்ச்சிகாக இங்கே இறக்குமதியான கலைஞர்களை நமது மலேசிய தொலைக்காட்சியின் தமிழ் செய்திப் பிரிவும் விமான நிலையத்திலேயே பேட்டி கண்டு அதே தினம் தனது மாலை செய்தி நிகழ்ச்சியில் ஒளிபரப்பியது.

வானொலி மற்றும் பத்திரிகைகளில் இந்நிகழ்ச்சி பற்றி மிக கூடுதலாக பணம் வாங்கிக் கொண்டு விளம்பரப்படுத்தப்பட்டது.

இறுதியில் நிகழ்ச்சியும் குறிப்பிட்ட தினத்தன்று ஆனால் குறிப்பிட்ட நேரத்திற்குப் பிறகு நடந்தேறியது.

இந்நிகழ்ச்சி பற்றி கோலக்கெட்டிலைச் சேர்ந்த அன்பர் ஒருவர் புகார் செய்ய பி.ப.சங்கத்தின் உதவியை நாடினார்.

தானும் தன்னுடைய நண்பர்களும் ஆளுக்கு 500 ரிங்கிட் செலவு செய்து இந்நிகழ்ச்சியைப் பார்க்க கோலாலம்பூர் சென்றதாகவும் ஆனால் அங்கிருந்த கூட்டத்தின் காரணமாக உள்ளே நுழைவதற்கு அனுமதி வழங்கப்படவில்லையென்றும்



குறைபட்டுக் கொண்டு நம்மிடம் புகார் செய்தார்.

ஒரு பயனீட்டாளர் என்ற ரீதியில் அவருடைய புகார் நியாயமானது என்றாலும் சம்பந்தப்பட்ட நிகழ்ச்சி ஏற்பாட்டாளர்களிடமே புகார் செய்யும்படியும் நாங்கள் ஆலோசனை கூறினோம். இதற்கு காரணம் இது போன்ற சினிமா நிகழ்ச்சிகளுக்கு பினாங்கு பயனீட்டாளர் சங்கம் என்றுமே ஆதரவு தருவதில்லை. அதுவும் கோலாலம்பூரில் நடைபெற்ற நிகழ்ச்சிக்கு 500 ரிங்கிட் செலவு செய்து கொண்டு சென்றது அவருடைய குற்றம்.

இந்த தேவா கலை இரவு நிகழ்ச்சி பற்றி நமது பத்திரிகைகள் பல மாதிரியான குற்றங்களை இப்பொழொது சுமத்தத் தொடங்கியிருக்கின்றன. இதே போன்ற சினிமாக் கூத்தாடிகளின் நிகழ்ச்சிகள் பல இங்கே நடந்தேறியுள்ளன. பெரும்பாலும் அப்படிப்பட்ட நிகழ்ச்சிகள் பயனீட்டாளர்களின் பணத்தை பறிப்பதற்காகவே நடத்தப்படுகின்றன என்பதை யாரும் மறுக்க முடியாது.

ஏற்கெனவே நடந்து முடிந்த கூத்தாடி ரஜினிகாந்தின் நிகழ்ச்சி வரை எல்லாமே பணம் பறிக்கும் நிகழ்ச்சிகள்தான்.

இப்படிப்பட்ட நிகழ்ச்சிகளில் பாடப்படுகின்ற பாடல்கள் சமுதாயத்தை சீரழிக்கும் பாடல்களாகவுமே அமைந்திருக்கின்றன என்பதை யாரும் மறுக்க முடியாது. இவர்கள் பாடுகின்ற அல்லது கத்துகின்ற பாடல்கள் ஏற்கெனவே கேசட்டுக்கள், வீடியோ நாடாக்கள் வழி கேட்ட பாடல்கள்தான்.

ஒவ்வொரு நிகழ்ச்சிக்கும் ஒரு பயனீட்டாளர் குறிப்பாக கோலக்கெட்டிலைச் சேர்ந்த பயனீட்டாளரைப் போன்று ஒவ்வொருவரும் 500 ரிங்கிட் செலவு செய்தால் இச்சமுதாயம் எப்படிதான் முன்னேறப் போகிறது அல்லது மற்ற சமுதாயத்துடன் சரிசமமாக செல்லக்கூடிய வாய்ப்புதான் கிடைக்குமா?



படிப்பகம்

கலை கலாச்சாரத்தை வளர்ப்பதில் தவறு இல்லை. பாரதியார் தனது கவிதைகள் மூலமாக புரட்சியை ஏற்படுத்தினார். அவருடைய ஞான தத்துவ பாடல்கள் இன்னும் மனதைவிட்டு அகலாமல் நிலைத்து நிற்கிறது.

ஆனால் இப்பொழுது வருகின்ற பாடல்களை கேட்கவே முடிவதில்லை.

இரட்டை பொருள்பட உள்ள பாடல்கள் சந்தையில் அதிகரித்துவிட்டன. பாடல்களின் பொருள்தான் சீரழிந்துவிட்டது என்றால் பாடல்களின் இடையே வரும் "சினுகல்"களும் விரசமாகவே காணப்படுகின்றன.

இப்படிப்பட்ட பாடல்களால் சம்பந்தப்பட்ட பாடலாசிரியர்கள் கொழுத்த பணத்தை சம்பாதித்து விடலாம். ஆனால் பாதிக்கப்படுவது அந்த சமூகம் மட்டுமல்ல. மொழியின் தரமும் சீர்குலைந்து விடுகின்றது.

இப்படிப்பட்ட பாடல்கள் இளைஞர்களிடையே மிக பிரபலமாக திகழ்ந்து வருகின்றது. இதன் வழி கலாச்சாரமில்லாத இளைய சமூகத்தையே வளர்த்து வருகிறோம் என்பதை மறந்து விடக்கூடாது.

அண்மையில் பினாங்கு மாநிலத்தின் மிகப் பெரிய ஆங்கிலப் பள்ளியின் இந்திய ஆசிரியர் ஒருவரை சந்திக்க நேர்ந்தது.

அச்சமயம், தங்கள் பள்ளியில் உள்ள இந்திய மாணவர்களின் செயல்களைப்பற்றி அந்த ஆசிரியர் குறை கூறினார்.

சினிமா படம் பார்த்துவிட்டு, அதில் வரும் சினிமா பாடல்களை மனப்பாடம் செய்து கொண்டு பள்ளியில் முணுமுணுப்பது வழக்கமான செயல் என அவர் கூறினார்.

சில மாணவர்கள் சினிமா உலகத்திலேயே வகுப்பறையில் மிதந்து கொண்டு வருவதும், அவர்கள் உரையாடுகின்ற வசனங்கள் சினிமா பட சாயலில் இருப்பதாகவும் கூறினார்.

எதாவது கேள்விகள் கேட்டால் சினிமா பாடல்களிலே பதில் சொல்லும் பழக்கம் இடைநிலைப்பள்ளி மாணவர்களிடையே வளர்ச்சியடைந்து வருவதாகவும் அவர் சொன்னார்.

இவ்வாறு மாணவர்கள் சினிமா பாடல்களில் அதிகம் கவனம் செலுத்தினால், பின் எப்படி வாழ்க்கையில் முன்னேறப் போகின்றார்கள்.

நூற்றுக்கணக்கில் டிக்கட் வாங்கி, மூன்று மணி நேர நிகழ்ச்சியை காணச் சென்றால், அங்கே கூத்தும் கும்மாளமும் இருக்குமானால் யாருக்கு என்ன லாபம்.

ஏற்பாட்டாளருக்கும், பாடியவர்களுக்கும் மற்றும் விளம்பரம் பெற்றவர்களுக்கும் லாபம் இருக்கும். ஆனால் கஷ்டப்பட்டு வியர்வை சிந்தி உழைத்தவர்களுக்கு லாபம் இருக்குமா? நிச்சயம் இருக்காது.

இது ஒரு பொழுது போக்கிற்காக என எடுத்துக்கொள்ளலாம்.

ஆனால், அந்த பொழுது போக்கும் அர்த்தமுள்ள பொழுது போக்காக ஏன் இருக்கக்கூடாது.

உட்கார இடமில்லாமல், பாடுகின்றவர்களை பார்க்க முடியாமல், பாடுவதை கேட்க முடியாமல், நல்ல காற்றோட்ட வசதியில்லாமல், நெரிசலில் ஒரு பாட்டை அதுவும் எதற்குமே பயன்படாத ஒரு பாட்டை கேட்க வேண்டுமா?

சிந்தித்துப் பாருங்கள். உழைப்பு நம்முடையது. பணமும் நம்முடையது. சேமிக்கு வேண்டியதும் நம்முடைய கடமையே.

இருப்பதையெல்லாம் செலவு செய்துவிட்டால் ஆட்டமும்-பாட்டமும் நிச்சயம் சோறு போடாது.

தீய எண்ணம் என்னும்
விருந்தாளிக்கு இடம் தந்தால் அது
வீட்டின் அதிகாரி ஆகிவிடும்.
திருட்டுக் குணம் உடையவர்கள்
கோழைகள். அவர்கள் உள்ளத்தில்
துணிவு இல்லை

மகானுக்கு மாலை போட்டுவிட்டு
மனித நேயத்தை மண்ணில்
புதைத்துவிட்டோம். காந்தியைப் பற்றி
அளவுக்கதிகமாக பேசிவிட்டு அவரது
கொள்கைகளை அடியோடு
மறந்துவிட்டோம்.

www.padippakam.com

# எளிய வாழ்க்கை
# உயர்ந்த சிந்தனை

அக்டோபர் மாதம்!

சமீப காலமாக வாழ்ந்தவர்களில் மிகச் சிறப்பாக நம் முன் தோன்றுபர்கள் மகாத்மா காந்தியாகத்தான் இருக்க முடியும்.

"எளிமையான வாழ்க்கை - உயர்ந்த சிந்தனை" என்ற அவருடைய சித்தாந்தம் இன்று பலரால் பேசப்பட்டு வருகின்றது. அதோடு கடைபிடிக்கப்பட்டும் வருகின்றது.

இன்று மக்கள் வன்முறை கலாச்சாரத்தை நோக்கிச் சென்றுக் கொண்டிருக்கிறார்கள்.



பேச்சில் வன்முறை
நடையில் வன்முறை
கலாச்சாரத்தில் வன்முறை
உணவு முறையில் வன்முறை
வாழ்க்கையில் வன்முறை
குடும்பத்தில் வன்முறை

என வன்முறையாகவே இன்றைய ஓடிக் கொண்டிருக்கிறது.

"அகிம்சை - சத்தியாகிரகம் மகாத்மா காந்தியின் இந்த சிந்தனை இன்றைய மக்களுக்கு அவசியம் தேவை.

ஏதோ நாகரீகமான உலகத்தில் வாழ்கின்றோம் என்ற நோக்கத்தில் மக்கள் வன்முறையான வாழ்க்கையில் மிதந்து கொண்டிருக்கின்றனர்.

வன்முறை என்றால், அது அடித்தலும் - துன்புறுத்தலும் கொலை செய்வதும் மட்டுமல்ல.

ஒழுக்கக் கேடுகள், அன்பின்மை, விரயம், கலாச்சார சீரழிவு, சுற்றுப்புறத் தூய்மைக் கேடு, பயனீட்டாளர் கலாச்சாரம், சிறார் கொடுமை, மனைவியை அடித்தல், மது, புகை, சூதாட்டம் என இப்படி அடுக்கிக் கொண்டே போகலாம்.

இவையனைத்தும் வன்முறையே என கூறுகின்றார் காந்தி.

மனமாரச் செய்வதாக இல்லாத எச்செயலும் ஒழுக்கமானது என்று சொல்வதற்கில்லை. நாம் இயந்திரம் போல் செயல்பட்டு கொண்டிருக்கும் வரையில் ஒழுக்கம் என்பதற்கே இடமில்லை. ஒரு செயல் ஒழுக்கமானது என்று சொல்ல நாம் விரும்பினால், அது மனதாரச் செய்வதாக இருப்பதோடு கடமையாக கொண்டு செய்ததாகவும் இருக்க வேண்டும்.

பயந்துக்கொண்டோ, எந்த வகையான நிர்ப்பந்தத்தாலோ செய்யப்படுவது ஒழுக்க மற்றதாகி விடுகிறது என கூறுகின்றார் பாபூஜி.

ஆக மனிதர்களிடையே இந்த ஒழுக்கமற்ற செயல்கள் அதிகரித்துக் கொண்டே போவதற்கு என்ன காரணம்.

சமூக கலாச்சாரம் சீரழிந்துக்கொண்டே போவதால்தான் இந்த நிலைமை ஏற்படுகின்றது.

பலதரப்பட்ட சீரழிவை ஏற்படுத்துகின்ற கலாச்சாரங்கள் பணத்தின் மீது வெறித் தன்மை, அகம்பாவம், அற்பத்தனமான ஆசைகள் இவையனைத்தும் ஒரு மனிதனின் பண்புகளை சீர்குலைத்து அவனிடையே பல வேண்டாத ஆசைகளை உருவாக்கி விடுகின்றது.

இதுப் பற்றி மகாத்மா காந்தி சேவைக்கு வெகுமானம் பெறக்கூடாது என ஆணித் தரமாக கூறுகின்றார்.

தொண்டு செய்பவர்கள் பிரதிபலனாக எதையும் எதிர்பார்க்கக்கூடாது என காந்தி கூறியிருக்கின்றார்.

ஒரு முறை காந்திஜி தென்னாப்பிரிக்காவிலிருந்து மீண்டும் இந்தியா திரும்பும் போது அவருக்கு ஆங்காங்கே பிரிவுபசாரக் கூட்டங்கள் நடந்தன.

மக்கள் காந்தி மீது புகழ் மாலையைப் பொழிந்து தள்ளினர். காந்திக்கும் - கஸ்தூரிபாய்க்கும் அநேக விலையுயர்ந்த வெகுமானங்களை அள்ளிக் கொடுத்தனர். அவற்றில் தங்க கைக்கடிகாரங்களும், வைர மோதிரங்களும் இருந்தன. கஸ்தூரிபாய்க்கு இருபத்திரண்டு



படிப்பகம்

www.padippakam.com

பவுனில் தங்கச் சங்கிலி ஒன்றும் கொடுத்தார்களாம். மக்களின் அளவு கடந்த அன்பு காந்தியை மிகவும் கவர்ந்துவிட்டது. ஆனால் ஏனோ அவர் மனதுக்கு நிம்மதி இல்லை.

இரவு முழுவதும் சரியான தூக்கமில்லாமல் சிரமப்பட்டார்.

" இந்த விலையுயர்ந்த வெகுமதிகளை மக்களிடமிருந்து பெறுவதற்கு எனக்கு என்ன உரிமை இருக்கிறது. மனமுவந்து செய்த தொண்டுக்கு சேவைக்கு சன்மானம் பெறலாமா?

"அப்படி பெற்றுக்கொண்டால் என் தொண்டுகளை விலைக்கு விற்றதாக அல்லவா முடியும்! சே! சே! அது மன்னிக்க முடியாத குற்றம்" என்று சொல்லி நொந்து போனாராம் காந்தி.

தனக்கு கொடுக்கப்பட்ட பொருட்களை தன்னிடம் வைத்துக்கொள்வது பெரிய குற்றம் என எண்ணினார்.

மறுநாள் தன் மனைவியையும் குழந்தைகளையும் அழைத்து தன் எண்ணத்தை எடுத்துச் சொன்னாராம்.

"நம்முடைய சாதாரண வாழ்க்கைக்கு இந்த விலையுயர்ந்த நகைகளை அணிந்துக்கொள்வது பொருத்தமாகாது. நாம் ஏதோ நம் கடைமையைச் செய்தோம். ஆகவே நாம் இதுவரை பெற்ற வெகுமதிகளை திருப்பிக் கொடுத்துவிடுவதே சிறந்தது," என சொல்லியிருக்கின்றார்.

இந்த யோசனைக்கு காந்தியின் பிள்ளைகள் ஒப்புக்கொண்டார்கள். ஆனால் மனைவி கஸ்தூரிபாய் உடன்படவேயில்லை.

"உங்களுக்கு நகைகள் வேண்டாம். உங்கள் பிள்ளைகளுக்கும் வேண்டாம். எனக்குக்கூட வேண்டாம். ஆனால் மருகமள்களுக்கு அவை வேண்டுமே. அச்சமயத்தில் யார் அவர்களுக்கு நகை செய்து போடுவது," என கேள்வி எழுப்பினாராம் மனைவி.

"அதனால் அந்தத் தங்கச் சங்கிலியை மட்டும் நான் திருப்பிக் கொடுக்கப்போவதில்லை," என வாதிட்டாராம்.

இதைக் கேட்ட காந்தி, மனைவியின் மீது கோபப்படவில்லை. "இன்னும் இவள் அறிவில் உயரவில்லையே," என வருந்தினாராம்.

மீண்டும் மனைவியை தனிமையில் அழைத்து அறிவுரை கூறினார் காந்தி.


"உண்மையான ஊழியன் எந்த வெகுமானத்தையும் எதிர்பார்க்கக்கூடாது. அப்படியே கொடுத்தாலும் வாங்கக்கூடாது. உன் பிடிவாதத்தால் எனக்கு கெட்ட பெயர்தான் வரும்," என எடுத்துச் சொல்லியிருக்கின்றார்.

இதைக் கேட்ட கஸ்தூரி பாய், வெகுமதியாக கொடுக்கப்பட்ட எல்லா நகைகளையும் கொண்டு வந்து காந்தியிடம் கொடுத்து விட்டார்.

உடனே காந்தி அந்த நகைகளை எடுத்துக்கொண்டு வங்கியில் கொடுத்து, பொது மக்களின் உதவிக்கு பயன்படுத்தும்படி ஏற்பாடு செய்து விட்டாராம்.

இந்த கொள்கைதான் ஒவ்வொருவருக்கும் வேண்டும். பதவி, ஆசை, பட்டம் என அலைந்துக்கொண்டிருந்தால் மனித நேயம் ஏற்படுவது எப்போது?

நாம் வாழ்கின்ற காலத்தில், நம்மால் இயன்றவரை மற்றவர்களுக்கு உதவி செய்து மகிழ்வுடன் வாழ்வதே சிறப்பபு.



# முக்கியம் உன் முகவரி

இளைஞனே!

கவலை ஏன் உனக்கு?
வீறு கொண்டு எழு கண்ணீர் ஆறுகளை கைது செய்
கருத்துப்படி வாழ வாலிப உணர்வுகளை
சிறிது காலம் விலக்கிவை
நம்பிக்கை ஆறுகளை நடமாடச் செய்
உன் இதயம் இரும்பானால்
அந்த இமயம் கூட இடம் பெயரும்
முடியும் என்ற உறுதி மட்டும் இருந்தால்
அதுவே உன் வெளிச்சத்துக்கு வழிகாட்டும்
வெற்றி உன் விலாசம் விசாரிக்கும்
விரக்தியை அடியோடு விலக்கு
ஏனெனில் நீ கருகும் மொட்டல்ல
மலர்ந்து மணம் பரப்ப வேண்டிய மலர்

உன் மனதின் எண்ணங்கள் இனி
சுருக்கமில்லாத சுதந்திர வானமாகட்டும்
திசைகளுக்கு தடைகள் இருக்கலாம்
ஆனால் உன் சிறகுகளுக்கு (திறமைகளுக்கு)
வலிமை இன்னும் இருக்கிறதே
நீ உண்மையில் திறமையானவன்
என்று இவ்வுலகம் நிச்சயப்பத்தட்டும்
உன் முகவரி மிக மிக முக்கியமானது என்று
இன்றைய வரலாறு எழுதிக்கொண்டு
உன் வீட்டு வாயிற்கதவை தட்டட்டும்
புறப்படு தோழா! புறப்படு!
வெற்றி உனதே!

*அன்பு ஜோசப் ராஜா*



படிப்பகம்

www.padippakam.com



# எங்கே தார்மீக நெறிகள்?

இன்றைய மனிதர்களின் பண்புகள் கலாச்சாரம் ஆகியவை சிறுக சிறுக மாற்றப்பட்டு வருகின்றனவா அல்லது மாற்றம் கண்டு வருகின்றதா என்று தெரியவில்லை.

அனைத்து பிறவியிலும் மேலோங்கி திகழும் மனிதப் பிறவி இன்று பலதரப்பட்ட இன்னல்களுக்கு ஆளாகி வருகின்றது.

ஏன்?

எண்ணங்கள் மாறுபடுகின்றன. புதிய மரபுகளால் கருத்துக்கள் தோன்றுகின்றன. முதன் விளைவாக வாழ்க்கையின் புனிதத்தன்மைகள் பாதிப்படைகின்றன.

இது இங்கு மட்டும் நடைபெறவில்லை. உலகின் எல்லா பகுதிகளிலும் காண முடிகின்றது.

காலம் காலமாக கடைப்பிடிக்கப்பட்டு வரும் கலாச்சாரம், நற்பண்புகள், பழக்க வழக்கங்கள் மற்றும் பண்பாடுகள், ஓட்டைகள் என கருதப்பட்டு ஒதுக்கித் தள்ளப்படுகின்றன.

மேற்கத்திய கலாச்சாரம், நமது பண்புகளை அழித்து விட்டு தனது "தாராள" கலாச்சாரத்தை வளரும் நமது தலைமுறையினரிடையே வளர்த்து வருகின்றது.

இந்த விபரீதத்தைத் தடுக்க ஒரே வழி நமது பண்புகள் போற்றப்பட வேண்டும். மூட நம்பிக்கைகள் அகற்றப்பட வேண்டும். மக்களை விழித்தெழச் செய்ய வேண்டும்.

இதனை குறைவின்றி முழுமையாக நிறைவேற்ற உறுதியான முயற்சி மேற்கொள்ளப்பட வேண்டும்.

கலப்படமான சில பல அறிவுத் துணுக்குகளைப் பெற்று அதன் மூலம் ஓர் தொழிலை அடைவதே கல்வியின் பயன் என பலர் நினைக்கின்றார்கள். அது தவறு.

கல்வியின் மேலெழுந்த வாரியான பயன்களைச் சிரமமின்றி அடைய அதர்மமான வழிகள் கையாளப்படுகின்றன என பிரபுதாஸ் பிட்வாரி கூறுகிறார்.

கல்வி என்பது பல்வேறு அம்சங்களை இணைத்து ஒரு சிறந்த மனிதனை உருவாக்குகின்ற அற்புதமான செயல்பாடு என்பது உணரப்படுவதே இல்லை.

கல்வி என்பது ஒருவன் தன்னைத்தானே வடிவமைத்துக்கொள்வதாகும். அது மிகுந்த கவனம் செலுத்த வேண்டிய கடினமான காரியம்.

கல்வி மூலம்தான் ஒருவன் பூரணத்துவம் அடைகின்றான்.

சுய முயற்சி இதற்கு நிறைய தேவை. இளம் உள்ளங்கள் சுற்றுச்சூழலை நன்கு கவனிக்க வேண்டும்.

மனிதர்களையும் பொருள்களையும் பல்வேறு விதங்களிலும் ஏற்றத்தாழ்வுகளிலும் கண்டு ஞானத்தைப் பெற்றுச் சேமித்துக் கொள்ள வேண்டும்.

தாங்கள் பார்த்ததைப் பற்றிச் சிந்திக்கும் ஆற்றலை அவர்கள் வளர்த்துக் கொள்ள வேண்டும்.

கல்வி என்பது பணத்திற்காகத்தான் என்ற மாயையை அகற்ற வேண்டும்.

தேவையற்ற விஷயங்களை விலக்கிவிட வேண்டும். மனிதர்கள் பலரின் மேன்மையான கருத்துக்கள் இளம் உள்ளங்களில் ஒரு பாதிப்பை ஏற்படுத்த வேண்டும். பெரியோர்களை நேரில் சந்திப்பதின் மூலமோ அல்லது அவர்களின் எழுத்துக்களைப் பக்தியோடு படிப்பதன் மூலமோ இதனை அடையலாம்.

ஆனால் இன்றைய சமுதாயம், சினிமா கூத்தாடிகளின் வாழ்க்கை வரலாற்றை பின்பற்றுகிறது. கடன் வாங்கி கல்யாணம் செய்கின்றது, சேர்த்த பணத்தை அழித்து விடுகின்றது. மது, புகை, சூதாட்டம், போதை என மனித நெறிக்கு ஒவ்வாத செயலில் ஈடுபட்டு பல



படிப்பகம்

www.padippakam.com

சிக்கலைத் தேடிக் கொள்கின்றது. ஏன்?

சொந்த மனைவியை அடிக்கின்றான். தாய் தன் சொந்த குழந்தையை சித்ரவதை செய்கின்றாள். சகோதரர்கள் கத்தியால் வெட்டிக் கொள்கின்றனர். பாசத்தோடு பழக வேண்டியவர்கள் பயந்து பயந்து சாகின்றனர். குடும்பத்தில் மகிழ்ச்சிகரமான சூழ்நிலை மறைந்துக் கொண்டே வருகின்றது.

மாணவர்கள் விரக்தியால் தற்கொலை செய்துக் கொள்கின்றனர். காதலர்கள் மருந்து குடித்து இறக்கின்றார்கள். இளைஞர்கள் கத்தியும்-கம்புமாக அலைகின்றார்கள்.

ஏன் இந்த மாற்றம்? மனிதப்பிறவியில் இப்படிப்பட்ட கரும்புள்ளிகள் தோன்ற காரணம் என்ன?

சிந்தனையுடையவர்களாக இல்லாமலிருப்பதற்கு என்ன காரணம்?

கல்வி கற்ற சமுதாயமாக இருந்தால் இத்தனை பிரச்னைகளிலிருந்து நிச்சயம் விடுபடமுடியும்.

பெற்றோர்களின் தனிப்பட்ட வாழ்க்கையே குழந்தைகளுக்கு முன்னுதாரணம்.

பெற்றோர்களின் பிரதிபலிப்பாகவே குழந்தைகள் வளர்கின்றார்கள்.

அந்த குழந்தையின் தார்மீக நெறிகள் பெற்றோர்களின் கைகளில்தான் உள்ளது.

முகத்தில் ஒரு மறுமலர்ச்சி தேவையென்றால் தன்னம்பிக்கை வளர வேண்டும். உழைப்பை நம்ப வேண்டும். சேமிக்க வேண்டும். விரயம் தவிர்க்கப்பட வேண்டும்.

ஒவ்வொருவரும் தன் சொந்த குடும்ப நலனில் அக்கறை கொள்பவராக இருந்தால் சமூக சீர்கேடுகள் தோன்றாது.

சிந்தனையுடையவர்களாக, உழைத்த பணத்தை சேமிக்கக் கூடியவர்களாக தார்மீக நெறிகளை பின்பற்றுபவர்களாக திகழ்வோம். இதன் வழி சமுதாயம் மட்டும் வளர்ச்சியடையாது. ஒரு குடும்பமும் ஏன் தனிப்பட்ட ஒருவரும் மேம்பாடு காணுகின்றார்கள்.

# விழி எழு

இளைஞனே ...
விழி எழு ... எழு ...
விழித்தெழு ...
சோம்பல் போர்வையை
தூக்கி எறி(ரி)

இருட்டறைக்குள் அடைபட்ட
சிலந்தி
சுவருக்கு சுவர் தாவி
தன் வீட்டை
தானே கட்டிக் கொள்கிறது ...!

ஒரு
கூட்டுக்குள்
சுருண்டு கிடக்கும் நத்தை
வேளை வரும் போது
வெளியே வருகிறது ...
தன் உணர்வை
தானே சேகரிக்கிறது..!

சின்னச் சின்ன எறும்புகள்
சேர்ந்து சேர்ந்து ...
ஊர்ந்து ஊர்ந்து ...
கல்லையும்
தேய்க்கின்றன ...

புற்றீசலல்கள் கூட
புறப்பட்டு வந்ததும்
பூமியை
வலம் வரத் துடிக்கின்றன!
வானத்தை
அளந்து பார்க்கவே
ஆசைப்படுகின்றன...

அயிரை மீன்கூட
ஆற்று நீரை
எதிர்த்தே
எதிர் நீச்சல் போடுகிறது ...

என்
இனிய இளைஞனே ...
நீ என்ன ...
இந்தப் புழுப்
பூச்சிகளை விடவும்
மோசமானவனா ..?

இளைய மலேசியாவே
உன்னால் முடியும் ...
நம்பிக்கை என்னும்
கோலை ஊன்றி ...
நிமிர்ந்து நில்
நாளைய உலகம்
உன்
ஏவல் கேட்க எழுந்து
வரும் ..!
இளைஞனே ...
விழி ... எழு ..!
விழித்தெழு ..!

சூன்யன்



படிப்பகம்

www.padippakam.com

# மனிதர்களை சிந்திக்க விடுங்கள்

*****

*( 4.8.96 அன்று சென்னையில், வாலி + வைரமுத்து = ஆபாசம் என்ற நூலை வெளியீடு செய்து சிறப்புரையாற்றிய பி.ப.சங்கத் தலைவர் திரு எஸ். எம். முகம்மது இத்ரிஸ் அவர்களின் உரை)*

இந்த நிகழ்ச்சியில் நீங்கள் அனைவரும் திரளாக கூடியிருப்பது எங்களுக்கு மிகுந்த மகிழ்ச்சியை கொடுக்கிறது. இது ஒரு முக்கியமான கூட்டம். இதில் கலந்துக் கொண்டு உங்கள் எதிர்ப்பை தெரிவிக்க கூடியிருப்பதாக நான் நம்புகிறேன்.

மலேசிய நாட்டில் வாழக்கூடிய இந்தியர்கள் சிறுபான்மையினர். நாங்கள் கடல் கடந்திருந்தாலும் கூட இந்த பூர்வீக நாட்டில் நடக்கக்கூடிய பல்வேறு விஷயங்களில் அக்கறை கொண்டவர்களாக இருக்கின்றோம். உங்களுடைய சிறப்பிலே நல்வாழ்விலே எங்களுக்கு அக்கறை உண்டு. தனிப்பட்டவர்களுக்கு அல்லது அங்குள்ள மற்ற இந்தியர்களுக்கு இதிலிருந்து லாபம் எதுவும் இல்லாமல் இருந்தாலும் கூட இயற்கையாக இருக்கக்கூடிய ஈர்ப்புத் தன்மை உங்களது நன்மை மீது பற்றுக் கொள்ளச் செய்கிறது.

அமெரிக்காவில் வாழும் ஐரிஸ் மக்கள் அவர்கள் அமெரிக்காவிலேயே நான்கு தலைமுறைகளாக வாழ்ந்திருந்தாலும் கூட ஐரிஸ் நாட்டில் ஏற்படக்கூடிய நன்மை தீமைகளை அக்கறை கொள்கிறார்கள். அதேப் போல் மலேசியாவில் வாழும் இந்தியர்கள் இங்கு வாழக்கூடியவர்கள் குறிப்பாக தமிழர்கள் மீது அக்கறை கொள்ளவில்லை. இதனால்தான் இந்த காரியங்களில் ஈடுபடுகிறோம்.

மலேசிய இந்தியர்கள் பெரும்பாலும் தொழிலாளர்களாக அந்த காலத்தில் குடியேறியவர்கள். ஏற்கெனவே காலனித்துவ ஆதிக்கத்தின் கொள்கை காரணமாக அவர்களின் நிலை உயரவில்லை. அதற்காக எங்கள் பினாங்கு பயனீட்டாளர் சங்கம் இந்தியர்களிடையே அவர்களின் வாழ்க்கை முறையில் முன்னேற்றம் ஏற்பட வேண்டும் என்பதற்காக பல முயற்சிகளை செய்து வருகிறது.

எங்களுக்கு ஒரு விசனம் என்னவென்றால் இங்கே இருக்க கூடிய பாட்டு, இசை எல்லாம் இதன் மூலம் இருக்கக்கூடிய சினிமா கூத்தின் மூலம் இங்குள்ளவர்களை அழிப்பதோடு மட்டுமல்லாமல் கடல் கடந்து வாழும் இந்தியர்களுக்கும் அதனை அனுப்பி வைக்கிறார்கள். அவர்களை தலையில் தூக்கி வைத்து ஆடவில்லை அதற்கு எதிர்ப்பு காட்டுகிறார்கள். நீங்கள் செய்யும் தவறுக்கு எடுத்துக் காட்டாக நாங்கள் இந்த புத்தகத்தை தமிழ் நாட்டில் வெளியிட்டிருக்கிறோம்.

ஆரோக்கியமான பொழுதுபோக்கு எல்லாருக்கும் தேவையானதுதான்.

மனதை மகிழ்ச்சிப்படுத்துவதற்கு இசை, பாடல், கூத்து போன்றவை தேவைதான். ஆனால் அதற்கு மாறாக இப்பொழுது என்ன ஏற்பட்டு விட்டது என்னவென்றால் அமெரிக்க சமூகத்தில் ஏற்பட்ட பெரிய தீமை மக்களிடையே உள்ள கீழ்த்தரமான உணர்ச்சியைத் தூண்டி விட்டு அதிலிருந்து பெருத்தப் பணம் சம்பாதிக்க வேண்டும் என்ற ஒரு நோக்கத்தில் 30 ஆண்டுகளில் ஆரம்பிக்கப்பட்ட ஒரு நிலை இப்பொழுது மோசமாக போய்கொண்டிருக்கிறது.

அமெரிக்காவின் ஏற்றுமதிகளிலேயே, மூன்றாவது உலகநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யக்கூடிய பொழுதுபோக்கு மிகப் பெரிய வருமானமாகும். ஆக அதனுடைய எதிரொலி இப்பொழுது இங்கு வந்திருக்கிறது. அங்கு வரக்கூடிய கேசட்டுக்கள் இங்கு மலிந்து கிடக்கின்றன. பெரிய ஆபாச களஞ்சியங்களை ஏற்றுமதி செய்யும் நாடு இந்தியாவாகும். முப்பது நாற்பது வருடங்களுக்கு முன்பு இந்தியாவை எல்லோரும் பெருமையாக பேசுவதுண்டு. ஆன்மீகம் உயர்வாக உள்ள நாடு, மக்கள் ஆன்மீக பற்றுக் கொண்டவர்கள், தெய்வபக்தி, உயர்வு, பண்பு அனைத்திலும் சிறந்தவர்கள் என்று கூறப்படும். அதற்கு மாறாக இப்பொழுது வளைகூடா நாடுகள் மற்றும் மலேசியாவுக்கும் வரக்கூடிய பலவிதமான ஆபாச இசை, பாட்டு, சினிமா, வசனம் எல்லாமே இங்கிருந்து ஏற்றுமதி செய்யப்படப்படுகிறது. இது மிகவும் கவலைக்குரிய விஷயமாகும்.

ஆக இந்த மாதிரியான ஒரு நிலைமையை இங்குள்ளவர்கள் ஏன் எதிர்க்கவில்லை என்பது அங்குள்ளவர்களுக்கு பெரும் கேள்வி. இந்தியா ஒரு பழம் பெருமையான நாடு. பல தலைவர்களை உருவாக்கிய நாடு. அதுவும் தமிழ்நாட்டில் நல்ல பல சிறப்பான இலக்கியங்கள் எல்லாம் உண்டு.

பாரதியார் தேசியத்தை பற்றி பாடினார். அவர் நெஞ்சு பொறுக்குதில்லை என்றும் பாடினார். மனிதனை உயர்த்தக்கூடிய, மேம்பாடு காணக்கூடிய பாடல்களை எல்லாம் பாடினார்களே, ஏன் இப்பொழுது உள்ளவர்கள் அந்த மாதிரி பாடல்களை பாடுவதில்லை. அதேப்போல் சினிமா கூத்துக்களில் சமூகத்தில் உள்ள வறுமை, நோய், பிணி போன்றவற்றை எடுத்துக்காட்டி மனிதர்களை சிந்திக்க தூண்டிவிடும் நல்ல பண்புகளை ஏன் இவர்கள் சினிமாவில் காட்டக்கூடாது.

இயற்கையாகவே சினிமாவிலே தீமை இருக்கின்றதே தவிர நன்மை இல்லை. இதற்காகத்தான் நாங்கள் மலேசிய நாட்டில் சினிமா ஒழித்துக் கட்டுவதற்கு வேண்டாம் என்ற பெரும் இயக்கத்தை நடத்தி வருகிறோம். சினிமா ஒழிந்தால்தான் இந்த மாதிரியான நாடுகள் எல்லாம் சிறப்பாக இருக்கும்.

குறிப்பாக பார்க்கப்போனால், பம்பாய் போலிவூட் என்று பெயர் சூட்டியுள்ளார்கள். இதேப்போல் தமிழ்நாட்டில் பலமாதிரியான சினிமாக்களை உருவாக்குகிறார்கள். இந்த நாடு மிகவும் எளிய நாடு. இங்கு இருப்பவர்களின் சுமார் 60 விழுக்காட்டினர் நல்ல போஷாக்கு இல்லாமல் இருக்கிறார்கள். கிட்டதட்ட 49 விழுக்காட்டினர்



படிப்பகம்

www.padippakam.com

வறுமைக்கோட்டின் கீழ் வாழுகின்றார்கள்.

அப்படிப்பட்ட நாட்டில் இருக்கக்கூடியர்வகளுக்கு தெளிவை உண்டாக்கி, உண்மையை தெளிய வைத்து எப்படி மாற்றம் காண்பது என்ற முயற்சி இல்லாதபடிக்கு, அவர்களை இன்னும் வழிகெடுத்து, அறிவின்மையை உண்டாக்கி, கீழ்த்தர உணர்ச்சி, காமம், குரோதம், வன்மையை வளர்த்து விடுவது இதைவிட மோசமான காரியம் வேறு எதுவும் இல்லை. இதற்கு சமூகத்தைத்தான் குற்றம் சொல்ல வேண்டியிருக்குது. காரணம் ஏன் அவர்கள் வெறுப்பை காட்டவில்லை.

மூன்றாவது உலக நாடுகளில் ஒரு தேசிய கொள்கை இருக்க வேண்டும். கலாச்சார ரீதியில் மக்களை நாசப்படுத்தாத ஒரு ஆரோக்கியமான பொழுது போக்குக்கு தேசிய கொள்கை இருக்க வேண்டும். பெண்களை இழிவுப்படுத்துவதை நாம் பார்த்துக் கொண்டு பேசாமல் இருப்பது பெரிய கொடுமையான விஷயம். போகிற போக்கை பார்த்தால் சமூகத்தில் முக்கியம் வாய்ந்த அனைவரும் இதனை எதிர்க்க வேண்டும். பேசிவிட்டு மட்டும் போய்விடக்கூடாது. இதற்கு அடுத்து என்ன செய்ய வேண்டும் என்று யோசனை செய்ய வேண்டும். ஆபாசமான சினிமா படம் என்றால் மறியல் செய்ய வேண்டும். இந்தப் படத்தை பார்க்காதீர்கள் என்று இயக்கத்தை ஆரம்பிக்க வேண்டும். அந்த மாதிரியான ஒரு இயக்கம் ஏற்பட்டால் ஒழிய இந்நிலை மாறாது. இன்னும் இரண்டு வருடங்களில் இந்த சினிமாத் துறை நாசாமாக போனால் நல்லது என நான் நினைக்கின்றேன்.

மக்களுக்கு நன்மை பயக்காத எந்த தீமையையும் நாம் எதிர்த்து போராடத்தான் வேண்டும். சிந்திக்கும் தன்மை குறைவாக இருக்கும், உணர்ச்சிகள் அதிகமாக இருக்கக்கூடிய காலக்கட்டத்தில் அவர்கள் சிந்தனையைக் கெடுக்கக்கூடிய நஞ்சுகளை கொடுத்து நாசமாக்குகின்றனர். நடிகைகள் போடக்கூடிய உடைகள், வசனங்கள், பாடல்கள் பெண்களை இழிவுப்படுத்துவதாக இருக்கிறது. இப்பொழுது பாடல்களில் அவலங்களை பாமரன் எடுத்துச் சொல்லியிருக்கின்றார். இப்படி பல பாமரன்கள் உருவாக வேண்டும்.

நீங்கள் அனைவரும் இந்த நிகழ்ச்சிக்கு வந்திருப்பது மிகுந்த சந்தோஷத்தை தருவதாக இருக்கிறது. வந்தது மட்டும் போதாது, ஒரு தீர்மானமும் எடுத்துக் கொள்ள வேண்டும். இந்த நிலைமையை மாற்றுவதற்கான முயற்சிகளில் நாம் இறங்க வேண்டும். ஏற்கெனவே நான் கூறியது போல ஒரு தேசிய கொள்கையை உருவாக்க நாம் முயற்சி செய்ய வேண்டும். தமிழ்நாட்டு சர்க்கார் மூலமாக இந்த கொள்கையை செய்ய முயற்சிக்க வேண்டும். இருக்கக்கூடிய எல்லா விதமான பொழுதுபோக்குகளும் ஒரு வரையறைக்குள் உட்பட்டு, ஒரு ஒழுக்கக் கோட்பாடு வரைமுறை போன்றவற்றுக்குள் இருக்க வேண்டும். இதற்கு ஏற்ற ஆங்காங்கே ரசிகர் மன்றங்களை வைத்திருக்கிறார்களாம். அதற்கு மாறான மற்ற மன்றங்கள் கொண்டு வர வேண்டும். வறுமையைப் போக்கும், அடிப்படை மற்றும் குடியிருப்பு வசதி முறை உண்டாக்கும் மன்றங்களை உருவாக்கும் முயற்சிகளுக்கு இளைஞர்களை திரட்ட வேண்டும்.

உங்களுக்கெல்லாம் ஒரு வேண்டுகோள் விடுக்க விரும்புகிறேன். உங்கள் மேல் உள்ள பற்றுதலினால் இந்தப் புத்தகத்தை வெளியிட்டிருக்கின்றோம். மீண்டும் மீண்டும் இதனைத் தொடர்ந்து செய்வோம். ஆனால் அதற்காக உங்களிடம் பிரதி உபாகாரத்தை பெற விரும்புவதில்லை. அதே நேரத்தில் நீங்கள் செய்யவேண்டிய என்னவென்றால், இந்த சமூகம் மேம்பாடு அடைய, உயர்வடைய அதற்கு முக்கியமான நடவடிக்கை குடி, சூது, சினிமாவை ஒழிக்க வேண்டும். வீண் விரயத்தை ஒழிக்க வேண்டும். இந்நாட்டு ஜனங்கள் மிகவும் ஏழைகள் அவர்கள் வாழ்க்கையில் மேம்பாடு காண நாம் எல்லோரும் சேர்ந்து ஒத்துழைக்க செய்ய வேண்டும்.

நன்றி. வணக்கம்.






படிப்பகம்

www.padippakam.com

# வீட்டுக்கு தேவை நல்ல தலைமைத்துவம்

காலையில் எழுந்தவுடன் நாட்டின் நிலவரங்களையும் உலகின் நடப்புக்களையும் தெரிந்து கொள்வதற்காக தினசரி பத்திரிகைகளை புரட்டிப் பார்த்தால் அதிர்ச்சியான - சோகமான அவமானத்தை தேடித்தருகின்ற குற்றச் சம்பவங்களின் செய்திகள்தான் வெளி வருகின்றன. இவை நமக்கு தலைக் குனிவைத் தருகின்றன.

தனிப்பட்டவர்களின் தகராறிலிருந்து- குடும்ப தகராறு வரை ஒருவரை ஒருவர் தாக்கிக் கொண்டும் - குத்தி அடித்து கொலை செய்து, கைது செய்யப்படும் செய்திகளை காலையிலேயே படிப்பது என்பது ஒரு வெறுப்பைத் தருகின்றது.

புத்துணர்வுடன்- அன்றாட தொழிலை தொடங்குவதற்கு முன் இது போன்ற செய்திகளை காண்பதாலும் படிப்பதாலும் ஒரு வித சோக உணர்வு தோன்றி விடுகிறது.

அதுவும் அண்மையக் காலமாக, இது போன்ற கொலை-திருட்டு-கற்பழிப்பு-தற்கொலை சம்பவங்கள் இந்தியர்களிடையே அதிகரித்திருப்பது அதிக கவலையை தருகின்றது.

இதற்கு என்ன காரணம்?

பலர் பலதரப்பட்ட காரணங்களை சொல்கின்றனர்.

சினிமா கூத்தாடிகளுக்கு அடிமையானவர்கள் சினிமா காரணமல்ல என்று முதலைக் கண்ணீர் வடிக்கின்றனர்.

அரசியலுக்கு வரவிருப்பவர்களோ, நல்ல தலைமைத்துவம் இன்னும் வரவில்லை என அலைந்து நடிக்கின்றார்கள்.

தன்முனைப்பு பேச்சாளர்களோ, சுயமுயற்சியும்-தன்னம்பிக்கையும் இல்லாதது என காரணம் காட்டுகின்றார்கள்.

இதில் பிரிதொரு பேச்சாளர்களோ, மேலே உள்ளவர்களை நம்ப வேண்டாம் என்றும், நாங்களே உங்களின் குரு-எங்களையே வணங்குங்கள்- உங்கள் அறையில் உங்கள் பெற்றோர்களின் படத்திற்கு பதில் எங்களின் படத்தை மாட்டி வைத்துக் கொண்டு வழிபடுங்கள் என்று கூறி நூற்றுக்கணக்கில் பணத்தை சம்பாதிக்கும் ஆன்மீக பேச்சாளர்களாக பெருகி வருகின்றார்கள்.

இப்படி ஒருவருக்கொருவர் ஒவ்வொரு பிரிவாக சமுதாயத்தை பிளவுப்படுத்தி வருகின்றனர்.

ஆனால் உண்மையான காரணத்தை தொட்டு யாரும் பேசுவது கிடையாது.

திடீரென்று ஏன் இந்த இந்திய சமுதாயத்தில் மட்டும் இவ்வளவு பிரச்னைகள் தொடர்ந்தாற்போல் வந்துக் கொண்டே இருக்கின்றன.

ஏறக்குறைய கடந்த 10 ஆண்டுகளுக்கு முன் சமூகப் பிரச்னைகள் என்ற இந்த தொற்றுநோய் வளர ஆரம்பித்தது.

அப்பொழுதே இதற்கு தேவையான மருந்தை கொடுத்திருந்தால் குணப்படுத்தியிருக்கலாம் அல்லது தடுத்திருக்கலாம். ஆனால், அலட்சியமாக இருந்த காரணத்தினால் இன்று அது குணப் படுத்த முடியாத ஒரு நோயாக இருந்து வருகின்றது.

இன்னும் எவ்வளவு காலத்திற்கு இந்தப் பிரச்னை ஒரு தொடர் கதையாக இருக்கப் போகின்றது? குறைந்த பட்சம் ஒரு பத்தாண்டுகள் பிடிக்கலாம்?

நாளைய குடும்பத்தின் தலைவர்களாக பொறுப்பேற்க இருக்கின்றவர்களும், பொறுப்பற்றவர்களும் குடும்பத்தோடு வீட்டில் குடியிருக்காமல், காவல் நிலையத்திலும்-சிறைச்சாலையிலும் தங்கள் வாழ்நாளை கழிப்பது மிகப்பெரிய கவலையைத் தருகின்றது.

இவர்களை எப்படி திருத்துவது?

அல்லது இவர்கள் இந்த சமூக சீர்கேட்டிற்கு அழைத்துச் செல்லும் கராணத்தை எப்படி கண்டறிவது?

பினாங்கு பயனீட்டாளர் சங்கத்தின் ஆராய்ச்சி/ஆய்வின்படி இப்படிப்பட்ட சமூகப் பிரச்னைகளில் சிக்கிக் கொண்டவர்களின் பின்னணியில் பல பிரச்னைகள் இருப்பது கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

சம்சு/மது, கடன், சேமிப்பின்மை, வாழ்க்கையின் வழிகாட்டியாக சினிமாவையும்-சினிமா கூத்தாடிகளையும் பின்பற்றுவது, கல்வியில் ஈடுபாடு இல்லை, தாழ்வு மனப்பான்மை, தன்னம்பிக்கை குறைவு, இறை நம்பிக்கை இல்லாமை மற்றும் வெறுப்பு ஆகிய அனைத்தும் சேர்ந்து ஒருவனை பலதரப்பட்ட பிரச்னைகளுக்கு இட்டு செல்லுகிறது.

ஆகவே, சமுதாயத்தில் மாற்றம் ஏற்பட வேண்டுமென்றால் தனிப்பட்ட ஒருவனிடம் மாற்றம் ஏற்பட வேண்டும்.



படிப்பகம்

www.padippakam.com

அந்த மாற்றத்தின் வழி, ஒரு குடும்பத்தில் நல்ல தலைமைத்துவம் ஏற்படுமானால், அச்சமுதாயம் தலை நிமிர்ந்து நடக்கக்கூடிய ஒரு சமுதாயமாக திகழ முடியும். அதற்கு என்ன செய்ய வேண்டும்?

சம்சு-மது அருந்தக்கூடாது.

இளைஞர்களிடையே சம்சு/மதுபழக்கம் மிக வேகமாக பரவி வருகின்றது. இளைஞர்களின் அறிவையும் திறமையையும் சீரழித்து எதற்கும் பயன்படாத சக்திகளாக அவர்களை உருவாக்கி வருகின்றது மது/சம்சு. அதனை முற்றாக ஒழிக்க வேண்டியது நமது கடமை.

தமிழ் சினிமா படங்கள், சமுதாயத்தை கேவலப்படுத்துவதோடு, தனிப்பட்ட ஒருவனின் தன்மானத்தையும் பறித்து விடுகின்றது.

தமிழ்சினிமா இளைஞர்களின் ஒழுக்கத்தை சீர்குழைக்கின்றது. தீய சிந்தனையை ஏற்படுத்தி குண்டர் கலாச்சாரத்தில் ஈடுபட இளைஞர்களுக்கு ஊக்கமளிக்கின்றது.

நியாயத்திற்கும்-நீதிக்கும் வன்முறையே சிறந்தது என சித்தரிக்கும் சினிமா படங்கள் இளைஞர்களை அதிகம் கவர்ந்து விட்டன.

தமிழ் சினிமா, வாழ்க்கையில் மேம்பாடு காணவிருக்கும் சமுதாயத்திற்கு ஒரு தடைக்கல். எந்த வித பயனும்-நன்மையும் அதன் மூலம் பெற முடியாத போது அதற்காக பல மணி நேரத்தை வீணடிப்பது முட்டாள்தனமாகும். மனித பண்பாட்டிற்கு ஒவ்வாத சினிமாவை ஒதுக்கி வைக்க வேண்டும்.

ஒழுக்கக்கேடுகளை நகைச்சுவைகளின் வழி சித்தரித்து ஆபாச கலாச்சாரத்தை வளர்க்கும் கூத்தாடி சினிமா கலைஞர்களுக்கு எதிராகவும் போர்க்கொடி தொடுக்க வேண்டும்.

அறிவுக்கு ஒவ்வாத எழுத்துக்களை தாங்கி வருகின்ற தினசரி வார மாத இதழ்களை புறக்கணித்து அறிவூட்டக்கூடிய, சிந்தனையைத் தட்டி எழுப்பக்கூடிய எழுத்துப் படைப்புக்களை படிக்கும் பழக்கத்தை வீட்டுக்கு வீடு வளர்க்க வேண்டும்.

ஒரு குடும்பம் என்பது பல்கலைக்கழகம் என்று சொல்லியிருக்கின்றாரகள். அந்த குடும்பத்தில் நல்ல பழக்கங்களும் நல்லொழுக்கங்களும் நற்பண்புகளும் நடமாட வேண்டுமென்றால் நல்ல தலைமைத்துவத்துவம் அமைக்கப்பட வேண்டும்.

வீட்டின் தலைவரோ தலைவியோ மேற்கூறிய அனைத்துப் பண்புகளையும் கடைபிடிப்பவராக, பின்பற்றுபவராக இருந்தால் அவரே ஒரு சிறந்த தலைமைத்துவம் அமைக்க வேண்டும்.

அவரின் அடிச்சுவட்டை பின்பற்றுகின்ற அந்த குடும்பத்தைச் சேர்ந்த பிற உறுப்பினர்களும் எதிர்காலத்தில் அனைத்து நற்பண்புகளும் கொண்ட மிகச் சிறந்த தலைமைத்துவத்தை உருவாக்கக்கூடியவர்களாக திகழ்வார்கள் என்பதில் ஐயமில்லை.

ஒரு நல்ல தலைமைத்துவம் ஏற்படுவதற்கு பெற்றோர்களின் பங்கும் இன்றியமையாததாகும். தங்கள் குழந்தைகளுக்கு முன் எடுத்துக்காட்டு பெற்றோர்களாக அவர்கள் திகழ வேண்டும்.

பெரும்பாலான பெற்றோர்கள், தங்கள் குழந்தைகளிடம் அதிக நேரத்தையும்-அன்பையும் செலுத்தாமல் பணத்திற்கே நேரத்தை செலவிடுகின்றனர். இதனால் பெற்றோர்களுக்கு குழந்தைகளுக்கும் இடையே இடைவெளி அதிகமாகி, விரிசல் ஏற்படுகின்றது.

இது தவிர்க்கப்பட வேண்டும். பெற்றோரின் வாழ்க்கைச் சுற்றுச்சூழலே, அக்குடும்பத்தின் எதிர்கால வாழ்க்கை முறையை நிர்ணயிக்கும் என்பதை மறந்து விடக்கூடாது.

ஆகவே வீட்டில் வளர்க்கப்படுகின்ற ஒரு சிறந்த தலைமைத்துவம் அச்சமுதாயத்தை சென்றடையும் என்பதில் சந்தேகம் இல்லை. வீட்டுக்கு வீடு நல்ல தலைமைத்துவம் அமைய அனைவரும் பாடுபட்டால் இந்த இந்திய சமுதாயத்தில் நடைபெறுகின்ற கொடிய சமுதாயப் பிரச்னைகளை எவ்வித தடையுமின்றி துடைத்தொழிக்க முடியும் என்பதில் சிறிதும் ஐயமில்லை.

பிரச்னைகளைப் பற்றியே தொடர்ந்து பேசிக் கொண்டிருக்காமல் அதனை நிவர்த்தி செய்வதற்கான வழிமுறைகளை கடைபிடித்து சிந்திக்கின்ற ஒரு சமுதாயத்தை, மதிக்கின்ற ஒரு சமுதாயத்தை உருவாக்குவதில் அனைவரும் பாடுபட வேண்டும் என கேட்டுக் கொள்கிறோம்.

# நீதி

*ஆயிரம் உண்டு இங்கு நீதி*
*அடிப்பவனுக்கொரு நீதி*
*படித்தவனுக்கொரு நீதி*
*பாட்டாளிக்கொரு நீதி*
*பணக்காரனுக்கொரு நீதி*
*ஏழைக்கொரு நீதி*
*ஏமாற்றுக்காரனுக்கொரு நீதி*
*ஏனென்று கேட்பவனுக்கோ*
*ஏனோ அநீதி*
*ஓ... நீதி தேவதையின்*
*வழியில் கட்டிய துணியில்*
*வீழ்ந்து விட்டதோ ஓட்டை?*

அமுல் மேரி



படிப்பகம்

www.padippakam.com

# பெற்றோர்களே! எங்கே போகிறீர்கள்?

ஒருவனின் பேச்சு, ஒழுக்கம், கலாச்சாரம் உணவு முறைகள் போன்றவற்றை எடைபோட வேண்டுமென்றால் அவனின் பெற்றோரைப்பற்றி தெரிந்துக் கொண்டாலே போதும் என்பார்கள்.

ஒரு குழந்தை ஒவ்வொரு பழக்கத்தையும் தனது பெற்றோர்களிடமிருந்தே கற்றுக் கொள்கிறது.

பெற்றோர்கள் பேசுகின்ற மொழியிலிருந்து உண்ணும் உணவு, உடுத்தும் உடை கடைப்பிடிக்கும் ஒழுக்கம் மற்றும் ஒருவருக்கொருவர் அன்பு செலுத்துகின்ற வரையில் ஒரு குழந்தை கடைபிடித்து வருகின்றது.

என்னதான் சுற்றுச்சூழல் வளருகின்ற ஒரு குழந்தையின் வளர்ப்பு முறையில் பாதிப்பை ஏற்படுத்துவதை அதிக அளவிலான வளர்ச்சி முறை வீட்டிலிருந்தே ஊட்டப் படுகின்றது.

பெற்றோர்களின் பங்கு பாதிப்பும் 85 விழுக்காடு இருந்தால் வீட்டுக்கு வெளியே இருக்கின்ற சுற்றுச்சூழலின் பாதிப்பு 15 விழுக்காடு அமைந்திருக்கும். ஆகவே, வீட்டுக்குள்ளேயே அதாவது பெற்றோர்களின் ஒவ்வொரு நடத்தையும் ஒரு குழந்தையின் வளர்ச்சிக்கு துணையாக அமையலாம் அல்லது சோதனையாகவும் இருக்கலாம். அது பெற்றோர்களின் கைகளில் உள்ளது.

வீட்டுக்கு வெளியே ஒரு குழந்தைக்கு ஏற்படுகின்ற பாதிப்புக்களை, வீட்டுக்குள் இருக்கும் பெற்றோர்களின் அன்பு என்ற மருந்தால் நிச்சயம் குணப்படுத்த முடியும்.

ஆகவே பெற்றோர்களின் பங்கும் கவனிப்பும் ஒரு குழந்தைக்கு மிக அவசியமாகிறது.

ஆனால் இப்பொழுதுள்ள பெற்றோர்கள் தங்கள் குழந்தைகளிடம் நேரத்தை செலவழிக்கின்றார்களா?

தங்கள் குழந்தைகளுக்கு முன் அன்பு கொண்ட பாசமிகுந்த, பரிவு மிக் பெற்றோர்களாக காட்சியளிக்கின்றார்களா?

தீய காரியங்கள் வீட்டில் நடைபெறாவண்ணம் முன் எச்சரிக்கையாக இருக்கின்றார்களா?

ஒரு குழந்தையின் ஒழுக்கம், பண்பாடு சீர்குழந்திருந்தால் அதற்கு பெற்றோர்களே காரணம்.

ஒரு ஆண் குழந்தை தனது 12 வயதில் சிகரெட் பிடித்தும் 16 வயதில் மது அருந்தியும் 18 வயதில் சூதாடுகின்றார்கள் என்றால் அதற்கு அவனைச் சொல்லி குற்றமில்லை. அல்லது அவனுடைய நண்பர்களைச் சொல்லிக் குற்றமில்லை.

அந்த முழு காரணமும் பெற்றோர்களையே போய்ச்சேரும்.

ஒன்று தந்தை இந்த பழக்கங்களை கடைபிடிப்பவராக இருக்கலாம். அல்லது அந்த வீட்டிற்கு வரும் தந்தையின் நண்பர்கள் இந்த தீய பழக்கங்களை பின்பற்றுபவர்களாக இருக்கலாம்.

ஒரு குழந்தை எந்நேரமும் புத்தகமும் கையுமாக இருக்குமானால், நிச்சயம் அக்குழந்தையின் பெற்றோர்கள் படிக்கின்ற பழக்கத்தில் ஆர்வமுடையவர்கள் என்று மிக எளிதாக புரிந்துக் கொள்ளலாம்.

பெற்றோர்கள் என எடுத்துக் கொண்டால், தந்தையின் பழக்க வழக்கங்களே பெரும்பாலும் குழந்தைகளால் பின்பற்றப்படுகின்றன.

தாயின் பழக்க வழக்கங்கள் மிக குறைவாக பின்பற்றப்படுவதற்கு முக்கிய காரணம் குடும்பத்தில் தந்தை குடும்பத் தலைவனாக மதிக்கப் படுவதினால்தான்.

மேலும் கலாச்சார பழக்க வழக்கங்கள் இதற்கு துணை போகின்றன. ஆனால் குடும்பச் சுமைகளை ஏற்றுக்கொண்டுள்ள தாய்மார்களின் வீடுகளில் தாய்க்கு அதிக மதிப்பு தரப்படுகின்றது. இது போன்ற வீடுகளில் தாயின் பழக்க வழக்கங்கள் குழந்தைகளால் பின்பற்றப்படுகின்றது.

இன்றைய குழந்தைகளிடம் காணப்படமுடியாத ஆன்மீகக் கல்வி, நல்ல ஒழுக்கம், மதித்து நடத்தல், சேமிப்புத் தன்மை மற்றும் மிக எளிதாக காண முடிகின்ற சுற்றித்திரியும் போக்கு, நிச்சயமில்லாத வாழ்க்கை மேற்கத்திய கலாச்சாரம், பண்பில்லாமை, பெற்றோர்களை மதிக்காமல் இருத்தல் போன்றவை ஏற்படுவதற்கு பெற்றோர்களே காரணமாக இருக்கின்றார்கள்.

பிள்ளைகளை ஈன்றுவிட்டால் மட்டும் போதாது. அவர்களை வளர்க்கவும் தெரிந்திருக்க வேண்டும்.

நேரமில்லை, வேலை செய்ய வேண்டும், என காரணம் கூறுபவர்கள் திருமணமே செய்துக் கொள்ளக்கூடாது. அப்படியே செய்துக் கொண்டாலும் குழந்தைகள் வேண்டும் என்ற ஆசை இருக்கவே கூடாது.

குழந்தைகளை ஆசைக்காகவோ அல்லது கடமைக்காககவோ ஈன்றெடுப்பவர்கள் நிச்சயம் ஒரு பொறுப்புள்ள பெற்றோர்களாக இருக்க முடியாது.

சிறுவயதிலேயே பெற்றோர்களின் அன்பையும் பாசத்தையும் மகிழ்ச்சியையும் பெற முடியாத ஒரு குழந்தை நிச்சயம் பரிவு மிக்க ஒரு குடும்பத்தை வளர்க்க முடியாது.


காலம் மாறிக் கொண்டு போகிறது. இது புதிய காலம் என "பொய்க் காரணம்" கூறி காலத்தின் மீது பழியை போட்டுவிட்டு, குடும்பத்தை கவனிக்காத பெற்றோர்களாலேயே குழந்தைகள் பல தீய வழிகளுக்கு செல்ல வழி வகுக்கிறது என்பதை மறந்துவிடக்கூடாது.

ஆகவே, பெற்றோர்கள் குறிப்பாக புதிய பெற்றோர்களாக உருவாகின்றவர்கள், நடந்துக் கொண்டிருக்கும் அவலங்களிலிருந்து விடுபட்டு தங்களை மாற்றிக்கொள்ளவேண்டும். இந்த அவலங்கள் ஒரு பாடமாக இருக்கட்டும். குணப்படுத்துவதைவிட தடுப்பதே சிறந்த விழியாகும்.



படிப்பகம்

www.padippakam.com






படிப்பகம்

www.padippakam.com

# Menangani Masalah Sosial Belia Masa Kini

******
***
*

Menjelang tahun 2000 dianggarkan generasi muda berumur di antara 15 hingga 39 thuan akan mencapai 9.25 juta orang. Golongan belia ini membentuk 42% daripada penduduk negara ini.

Memandangkan golongan belia inilah yang akan menjadi harapan sebagai waris masa depan negara maka sebarang masalah sosial yang melanda golongan ini perlu diberi perhatian serius.

Malangnya sejak akhir-akhir ini masalah sosial semakin banyak melanda golongan belia terutamanya golongan remaja kita.

Masalah sosial yang semakin meningkat dikalangan remaja kita ini termasuklah merokok, menagih dadah, berjudi, menonton filem lucah, lepak, menjadi ibu muda tanpa ikatan perkahwinan, lari dari rumah, meminum minuman keras, jenayah dan pelbagai masalah lain.

Banyak data yang menunjukkan wujudnya gejala yang membimbangkan ini. Dianggarkan 495 remaja lelaki dan 1,568 remaja perempuan yang berumur antara 14 hingga 21 tahun lari dari rumah pada 1994.

Angka ini jauh lebih tinggi berbanding 1990 iaitu 390 lelaki dan 1,168 perempuan.

Pada 1995, dari Januari hingga September sahaja, 5,053 gadis dilaporkan hilang dan sebahagian yang ditemui semula mengaku terbabit dengan pelacuran dan penagihan dadah.

Senario yang dikemukakan itu hanyalah sebahagian kecil daripada masalah sosial yang lebih besar yang dihadapi oleh golongan remaja kita hari ini.

Data penyalahgunaan dadah pula menunjukkan trend yang sentiasa membimbangkan. Pada 1990 kira-kira 16,956 penagih dadah dikesan dan angka ini terus meningkat kepada 24,023 pada 1993.

## Keganasan

Kes-kes keganasan juga menunjukkan arah aliran yang serupa, sepanjang 1990 hingga 1993, terdapat 46 kes pembunuhan/percubaan membunuh, 111 kes rogol dan 468 kes mendera berkalu di kalangan generasi muda.

Pada 1993, seramai 172,615 dariapda 4,207,381 pelajar sekolah rendah dan menengah terbabit dalam aktiviti seperti jenayah, lucah, kurang sopan, merosakkan harta benda sekolah, menipu, masalah pakaian dan berambut panjang, ponteng dan sebagainya. (Berita Harian, 15.5.96).

Dalam satu kajian oleh sekumpulan penyelidik dari universiti tempatan didapati seorang remaja secara puratanya melepak selama 16.3 jam seminggu.

Mereka yang terbabit dalam aktiviti lepak ini juga didapati mempunyai kecenderungan dalam aktiviti tidak sihat seperti membaca dan menonton bahan lucah (40%), melakukan hubungan seks sebelum kahwin (1%), berjudi (28%), mencuri (16%), merokok (70%), mengambil dadah (14%) dan meminum minuman keras (25%).

"Seperti yang ditegaskan oleh Menteri Belia dan Sukan, memang benar pembangunan ekonomi yang pesat dan kelemahan institusi kekeluargaan menjadi punca timbulnya masalah-masalah ini, kita juga bertanggungjawab, secara sedar atau tidak menggalakkan penyakit-penyakit sosial ini dalam aktiviti harian lain.

"Kerajaan bukan sahaja perlu menyemak semula program-program sosial masalah menilai secara serius aktiviti-aktiviti perniagaan, di mana keuntungan lebih diutamakan daripada kesihatan dan kebajikan masyarakat," katanya lagi.

Menteri Belia dan Sukan tidak seharunya berasa terkejut apabila diberitahu 71% remaja antara usia 13 - 21 tahun merokok. Pada hakikatnya, pihak kementerian perlu bertanggungjawab terhadap keadaan yang mendukacitakan ini.

Syarikat-syarikat tembakau menjadikan kumpulan usia ini sebagai sasaran dan Kementerian secara aktif membantu menggalakkan merokok dengan membenarkan syarikat-syarikat itu menaja acara sukan yang penting dan aktiviti budaya sejak bertahun-tahun lamanya.

Malah baru-baru ini, di sebalik bantahan



படிப்பகம்

www.padippakam.com

CAP (yang disokong oleh lebih 100 tandatangan), liputan Sukan Olimpik di Atlanta dibenarkan ditaja oleh sebuah syarikat tembakau dan pihak berkuasa tidak menghentikannya.

Malaysia merupakan satu-satunya negara di dunia yang membenarkan syarikat rokok mengaitkan diri dengan Sukan Olimpik.

Sepanjang temasya sukan itu, setiap hari dan beberapa kali rakyat Malaysia diberitahu bahawa jenama rokok itu menyumbang kepada kemenangan, kejayaan dan kesihatan yang baik. Lebih daripada itu, mereka diberitahu supaya "lepas bebas!". Lepas bebas daripada apa? Kawalan diri, norma sosial dan peraturan?

## Merokok

Ramai Kanak-kanak bertanya kepada CAP, jika merokok tidak baik untuk kesihatan mereka, kenapakah kerajaan membenarkan iklan yang dikaitkan dengan rokok disiarkan di TV? Kenapa ibubapa dan guru mereka merokok?

Kita perlu lebih daripada sekadar prihatin terhadap 71% belia yang merokok kerana akhirnya separuh daripada mereka akan mati akibat penyakit yang dikaitkan dengan rokok.

Barathi Raja, yang banyak menerima aduan daripada peminatnya di Malaysia kerana filemnya memuatkan banyak unsur lucah dan tidak baik, berkata penonton harus melihat adegan seks sebagai seni.

Raja berkata filem Tamil kini dikeluarkan mengikut kemahuan generasi sekarang dan pengeluar filem mungkin mengalami kerugian jika mereka tidak ikut trend peminat.

Raja, yang dikenali kerana filemnya yang banyak memaparkan kehidupan di desa, berkata adegan cinta dan seks boleh didapati dalam sastera India, termasuk Mahabaratha.

"Dalam membuat filem Tamil anda tidak boleh meninggalkan tradisi dan budaya," katanya.

Raja berada di Kuala Lumpur baru-baru ini bersama pelakon terkemuka filem Tamil, Sivaji Ganesan yang diberi anugerah istimewa oleh peminatnya di Malaysia pada Sabtu lalu.

Raja juga mempertahankan satu adegan dalam sebuah daripada filemnya yang menunjukkan hero menggunakan mulutnya untuk mengeluarkan duri daripada paha seorang gadis.

Ditanya mengapa duri itu mesti terdapat di paha dan bukan di tapak kaki, dia berkata itu adalah sesuatu yang baru dan penonton harus melihatnya sebagai seni dan bukan lucah.

Raja bagaimanapun bersetuju adegan seks dan ganas jauh melampaui had dalam kebanyakan filem Tamil.

Seorang lagi penerbit filem yang terkenal dan bekas ahli politik negeri Tamil Nadu di India, Kovai Chelian, berkata adalah tidak ekonomikal untuk mengeluarkan filem dengan tema sosial seperti pada 60-an.

"Kita tahu kejayaan filem Tamil klasik yang dikeluarkan pada tahun lalu tetapi kita terpaksa menggulung tikar jika kita membuat filem seperti itu sekarang," katanya.

"Hari ini penonton mahukan lebih banyak adegan cinta dan pergaduhan bagi memenuhi citarasa mereka," katanya.

Chelian berkata perubahan itu perlu dari masa ke masa kerana belia kini tidak lagi menggunakan dhoti, sebaliknya memakai jeans.

Dia berkata banyak penerbit yang muflis kerana mengeluarkan filem dengan tema yang popular 30 tahun yang lalu.


Seorang lagi penerbit, Citra Letchumanan, berkata teknik baru yang digunakan dalam filem-filem Tamil menyebabkan filem-filem itu popular sehingga ke India Utara yang mana bahasa penghantarnya ialah Hindi.

Satu rencana yang dikeluarkan oleh Bernama mengenai kesan negatif filem Tamil terhadap belia India di Malaysia dikemukakan kepada ketiga-tiga personaliti industri perfileman dari selatan India itu.

Raja berkata dia akan menunjukkan rencana itu kepada penerbit dan pengarah filem Tamil yang lain di India bagi membolehkan mereka meneliti semula had adegan seks dan ganas. – Bernama

படிப்பகம்

www.padippakam.com



விடியற்காலை தாக்குதல் சம்பவத்தில் தாக்குதல் நடத்தியவர்களின் ஒரு காரை மேல் படத்திலும் தாக்கப்பட்ட இளைஞர் பயன்படுத்திய காரை கீழ் படத்திலும் காணலாம். இதில் சம்பந்தப்பட்ட மூன்று கார்களும் தற்போது பெட்டாலிங் ஜெயா போலீஸ் நிலையத்தில் உள்ளன.

### சினிமாவில் வருவதைப் போல் நடுரோட்டில் தாக்குதல் நடத்திய கும்பல்

# இந்திய இளைஞரின் மண்டை உடைந்தது!

## தலையில் 11 தையல்கள்

(பி. ஜே. மாரியப்பன்)

பெட்டாலிங் ஜெயா, ஜூன் 2-

இரண்டு கார்களினால் நடுரோட்டில் தடுத்து நிறுத்தப்பட்ட மற்றொரு காரோட்டி சுமார் 10 பேரடங்கிய கும்பலினால் கடுமையாக தாக்கப்பட்டார்.

உடல் முழுவதிலும் கடுமையான காயங்களுக்குள்ளான 27 வயதுடைய அந்த இந்திய இளைஞர் இங்குள்ள அசுந்தா மருத்துவமனையில் சேர்க்கப்பட்டார்.

தலையில் கடுமையான காயம் ஏற்பட்டதால் 11 தையல்கள் போடப்பட்டன.

இச்சம்பவம் நேற்று முன்தினம் அதிகாலை 2.30 மணியளவில் சுங்கைவேக்கு அருகில் உள்ள மத்திய நெடுஞ்சாலையில் நிகழ்ந்தது.

அப்போது அந்த இளைஞர் கிள்ளானை நோக்கி தமது காரில் சென்று கொண்டிருந்தார்.

இரண்டு கார்களில் வந்த அந்த 10 பேர்களும் கார் இழுக்கும் வேலை செய்யும் அந்த இளைஞரின் காரை பின்னால் இருந்து இடித்து (இரு காரில் ஒன்று) மற்றொரு காரினால் முன்புறத்தில் வழி மறிக்கப்பட்டது.

கார்களை விட்டு ஹாக்கி கம்புகள், பிளாஸ்டிக் தடிகள் மற்றும் இரும்புகளோடு இறங்கி வந்த அந்த 10 பேரும் அந்த இளைஞரின் காரையும் கண்ணாடிகளையும் அடித்து நொறுக்கியதோடு காரினுள் இருந்த இளைஞரையும் தாக்கினர் என்று பெட்டாலிங் ஜெயா

(10-ம் பக்கம் பார்க்க)



### சினிமாவில் வருவதைப் போல் நடுரோட்டில் தாக்குதல் நடத்திய கும்பல்...

முதல் பக்கத் தொடர்ச்சி

இடைக்கால ஓசிபிடி முகமது ரிட்சுவான் நேற்று கூறினார்.

தாக்கப்பட்ட இளைஞருக்கு மண்டை உடைந்தது. தலையில் 11 தையல்கள் போடப்பட்டன.

நடுரோட்டில் திரைப் படங்களில் வரும் காட்சிகள் போல் நடந்த இச்சம்பவத்தைக் கண்ட இதர சில காரோட்டிகள் உதவிக்கு வந்தனர்.

அதே சமயத்தில் ரோந்து போலீசாரும் அங்கு வருவதைக் கண்ட அந்த 10 பேரும் அங்கிருந்து தப்பி ஓடி விட்டனர்.

எனினும், இது குறித்து தீவிர நடவடிக்கையில் ஈடுபட்ட போலீசார் சந்தேகத்தின் பேரில் நான்கு ஆடவர்களை இதுவரையில் கைது செய்துள்ளனர்.

மேலும், இவர்களிடமிருந்து போலீசார் நான்கு பாராங்கத்திகளையும் கைப்பற்றினர் என்று முகமது ரிட்சுவான் கூறினார்.

க்கைது செய்யப்பட்ட நால்வரும் ஒரு வாரத்துக்கு தடுத்து வைக்கப் பட்டுள்ளனர் என்றார் அவர்.

தாக்குதலுக்கு உள்ளான அந்த இந்திய இளைஞர் கடந்த பல காலமாக வாகனங்கள் இழுக்கும் தொழிலை செய்து வருகிறார் என்பது குறிப்பிடத்தக்கது.

படிப்பகம்

www.padippakam.com

### சாலையில் கும்பலாக இருக்க வேண்டாம் என்று கூறிய

# போலீஸ்காரருக்கு அடி உதை; ஆறு இந்திய இளைஞர்கள் கைது!

ராதா

சுங்கை பூலோ, மே 30- இரவுவேளையில் சாலையில் மோட்டார் சைக்கிளோடு கும்பலாக நின்றிருந்த இந்திய ஆடவர் கும்பலை கலைந்து செல்லும்படி அறிவுறுத்திய போலீஸ்காரர் ஒருவருக்கு அடியும், உதையும் விழுந்தது.

தலைகவசம், முஷ்டியால் தாக்கப்பட்ட கோப்ரல் செலாமாட் மாக்பூட் ( வயது 40) என்ற அப் போலீஸ்காரருக்கு தலையில் எட்டு தையல்கள் போடப்பட்டன.

இத்தாக்குதல் தொடர்பாக 20க்கும் 24 வயதிற்கும் இடைப்பட்ட ஆறு இந்திய இளைஞர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இவர்களோடு சேர்ந்து அப் போலீஸ்காரரை தாக்கியதாக சந்தேகிக்கப்படும் மேலும் ஒன்பது இந்திய இளைஞர்களுக்கு மாவட்ட போலீசார் வலைவீசியுள்ளனர்.

இதற்கிடையே, சந்தேகத்தின் பேரில் கைதாகியுள்ள ஆறுபேரை 14 நாட்களுக்கு தடுத்துவைத்து போலீசார் விசாரணை நடத்துவதற்காக மாஜிஸ்திரேட்டின் உத்தரவை நேற்று பெற்றனர்.

இத்தாக்குதல் சம்பவம் ஞாயிற்றுக்கிழமை இரவு இங்கு சுங்கை பூலோ பட்டணத்திலுள்ள சுங்கை பூலோ கால்நடை மையத்திற்கு முன்புறம் நிகழ்ந்தது என்று பெட்டாலிங் ஜெயா மாவட்ட போலீஸ் தலைவர் ஏ.சி.பி ஜோகார் சே டின் நேற்று கூறினார்.

சுங்கை பூலோ போலீஸ் நிலையத்தைச் சேர்ந்த கோப்ரல் செலாமாட் என்பவர் தமது மோட்டார் சைக்கிளில் இரவு மணி 8 அளவில் அவ்வழியாக வந்தபோது சாலையில் ஆடவர் கும்பல் ஒன்று மோட்டார் சைக்கிளில் நின்றிருப்பதைக்கண்டார்.

சந்தேகிக்கத்தக்க வகையில் நின்றிருந்த அவர்களை அணுகிய அவர் தம்மை போலீஸ்காரர் என அறிமுகப்படுத்திக் கொண்டு இருட்டு வேளையில் சாலையை மறித்து நின்றால் விபத்து ஏற்படும் என்று அறிவுறுத்தியதோடு, அங்கிருந்து கலைந்து செல்லும்படி உத்தரவிட்டார்.

அவரது வேண்டுகோளை அலட்சியப்படுத்திய 15 பேர் அடங்கிய அந்த இந்திய கும்பல் "போலீஸ்காரர்கள் என்றால் பெரிய ஆளா?" என்று அவர்கள் அவரை நோக்கி கூச்சலிட்டனர்.

அப்போது, அவர்களை கைது செய்ய அவர் முயன்றபோது அங் கும்பல் அவரை தலைக்கவசம், முஷ்டியால் தாக்கியது என்று ஏ.சி.பி. ஜோகார் கூறினார்.

அந்த தாக்குதல் குறித்து போலீசுக்கு தகவல் தரப்படவே, ஐந்து நிமிடம் கழித்து அவ்விடத்திற்கு வந்த போலீசார் சம்பவம் நிகழ்ந்த இடத்தில் ஒரு மோட்டார் சைக்கிளில் நின்றிருந்த 22, 24 வயதுடைய இருவரை போலீசார் முதலில் கைது செய்தனர்.

அதன்பின்னர், அன்றிரவு 11 மணி அளவில் அங்கு வந்த போலீசார் 20, 22 வயதுடைய மேலும் இருவரை கைது செய்தனர். தாக்குதல் நடத்தியபோது விழுந்து விட்ட தங்களது உடைமையை எடுத்துச் செல்ல வந்தபோது அவ்விருவரும் கைது செய்யப்பட்டனர்.

இதற்கிடையே, நேற்று அதிகாலை 5 மணி அளவில் தலைநகர் பங்சார் பகுதியில் 24 வயதுடைய மேலும் இருவர் கைது செய்யப்பட்டனர்.

கைதான இவர்கள் அனைவரும் கோலாலம்பூர் வட்டாரத்தைச் சேர்ந்தவர்கள் இருவர்கள் அங்கு ஏன் கும்பலாக போனார்கள் என்பதனை கண்டறிய போலீசார் விசாரணை நடத்தி வருகின்றனர்.



*** ஒரு வாரத்திற்கு தடுத்து வைக்கும் உத்தரவைப்பெற ஆறு இந்திய இளைஞர்கள் பெட்டாலிங் ஜெயா மாஜிஸ்திரேட் நீதிமன்றத்திற்கு கொண்டு வரப்பட்ட படம். (படம் த. பெருமாள்)

போலீஸ்காரரை தாக்கிய சம்பவத்தில் இவர்களோடு சம்பந்தப்பட்ட மேலும் 9 பேரை பிடிக்கும் முயற்சியில் முயன்று வருவதாக அவர் கூறினார்.

## திருட்டு ஆசாமி இருவர் கைது!

இதற்கிடையே, இங்கு பூச்சோங் பகுதியிலுள்ள வீடொன்றில் புகுந்து களவாடியதாக சந்தேகத்தின் பேரில் இரண்டு ஆடவர்களை மாவட்ட போலீசார் கைது செய்துள்ளனர் என்று ஏ.சி.பி. ஜோகார் கூறினார்.

சனிக்கிழமை இரவு மணி 2.30 அளவில் பூச்சோங்கில் 20, மற்றும் 28 வயதுடைய அவர்கள் கைது செய்யப்பட்டனர்.

அவர்களிடமிருந்து களவாடப்பட்ட ஒரு தொலைக்காட்சியும், வீடியோவும் சிக்கியது.

அவர்களிடம் நடத்தப்பட்ட விசாரணையில் அப்பொருட்கள் பூச்சோங் பெர்டானாவிலுள்ள வீடொன்றில் களவாடப்பட்டதாக தெரிய வந்துள்ளது. இருப்பினும், தங்கள் வீட்டில் பொருட்கள் களவுபோன விபரம் குறித்து வீட்டின் உரிமையாளர் போலீசில் புகார் செய்திருக்கவில்லை. பிப்ரவரி மாதத்தில் அப் பொருட்கள் களவுப்போய் உள்ளன.

கைதான இருவரில் ஒருவர் நில அளவாளர் மற்றொருவர் டீ. ஸ்டால் உரிமையாளர். அவர்களை தடுத்து விசாரணை நடத்தியதில் மேலும் 20 வயதுடைய மற்றொரு பேர்வழியை போலீசார் பூச்சோங் பகுதியில் கைது செய்தனர் என்றும் அவர் கூறினார்.

இவர்கள் இதர வீட்டுடைப்பு சம்பவங்களில் சம்பந்தப்பட்டுள்ளனரா என்பதை அறிய போலீசார் அவர்களிடம் விசாரணை நடத்தி வருகின்றனர் என்றார் அவர்.



படிப்பகம்

## தீபாவளி குதூகலம் அடிதடியில் முடிந்தது

# இந்திய இளைஞருக்கு பாராங் கத்தி வெட்டு

கோலாலம்பூர், அக். 26-

தீபாவளி பண்டிகையை குதூகலத்துடன் கொண்டாடிய இந்திய இளைஞர்களிடையே திடீரென ஏற்பட்ட கைகலப்பு அடிதடியில் முடிந்ததால் ஒருவருக்கு பாராங் கத்தி வெட்டு விழுந்தது.

இந்தப் பரபரப்பான சம்பவம் செந்தூல் பண்டார் பாருவில் நிகழ்ந்தது.

விற்பனை முகவர் என கூறப்படும் 24 வயது மதிக்கத்தக்க இளைஞருக்கு வலது கையில் பாராங் கத்தி வெட்டு விழுந்துள்ளது.

இவர் இப்போது கோலாலம்பூர் பெரிய மருத்துவமனையில் சிகிச்சைப் பெற்று வருகிறார்.

இச்சம்பவம் தொடர்பாக போலீசார் வீடு வீடாக மேற்கொண்ட சோதனையில் எட்டு இளைஞரை கைது செய்துள்ளனர்.

ரத்தக்கறை படிந்த மூன்று பாராங் கத்திகள், நான்கு ஹாக்கி மட்டைகள் மற்றும் சம்பவம் நிகழ்ந்த இடத்தில் இருந்த காரையும் போலீசார் கைப்பற்றியுள்ளனர்.

குடிபோதைக்கு பின்னர் இவர்களிடையே கைகலப்பு மூண்டதாக தெரிகிறது.

தீபாவளி தினத்தன்று இரவில் 10 பேர் அடங்கிய இளைஞர்கள் வீட்டின் அருகாமையில் உள்ள திடலில் தீபாவளி பண்டிகையை குதூகலமாக கொண்டாடினர்.

அப்போது அவர்களிடையே இந்தச் சண்டை ஏற்பட்டதாக தெரிகிறது.

## தீபாவளி கொண்டாடிய கும்பல்களுக்கு இடையே பயங்கரச் சண்டை!

கோலாலம்பூர், அக். 26-

தீபாவளியை மகிழ்ச்சியுடன் கொண்டாட காத்திருந்தவர்களுக்கு இடையில் நடந்த சண்டையில் 24 வயது விற்பனையாளர் ஒருவரின் வலது கையில் பலமான வெட்டுக்காயம் ஏற்பட்டு அவர் கோலாலம்பூர் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

தீபாவளி முதல்நாள் இரவு பண்டார்பாரு செந்தூல் திடலில் 10 பேர் கொண்ட ஒரு கும்பல் ஒன்று கூடி உணவருந்தியதாக கூறப்படுகிறது.

பின்னர் அவர்களுக்கிடையே கருத்து வேறுபாடு ஏற்பட்டு அது சண்டையில் முடிந்ததாக செந்தூல் ஓசிபிடி யாப் ஆ காவ் சொன்னார்.

ரத்தம் தோய்ந்த மூன்று பாராங் கத்திகள், நான்கு ஹாக்கி மட்டைகள் மற்றும் ஒரு காரை சம்பவம் நிகழ்ந்த இடத்தில் இருந்து போலீசார் மீட்டனர்.

திடலில் உணவருந்திய சிலர் குடி போதையில் கலாட்டாவில் இறங்கியதாக நம்பப்படுவதாக யாப் ஆ காவ் கூறினார்.

தீபாவளியை முன்னிட்டு திடலில் ஒன்று கூடிய அந்த 10 பேர் கொண்ட கும்பலில் 17 முதல் 27 வயது வரைக்குமான இளைஞர்கள் இருந்ததாக யாப் ஆ காவ் சொன்னார்.

www.padippakam.com

ரஜினியின் "முத்து" படம் பார்க்கச் சென்ற

# ரசிகர்கள் அடிதடி!



## அரங்கைவிட்டு பலர் தலைதெறிக்க ஓட்டம்

(நமது நிருபர்)

கோலாலம்பூர், அக். 26-

சூப்பர் ஸ்டார் ரஜினி காந்த் நடித்து தலைநகரில் திரையிடப்பட்டுள்ள முத்து படத்தின்போது இரண்டு காலிக் கும்பல்களுக்கு இடையே எழுந்த சண்டையினால் ரசிகர்கள் அச்சமடைந்து அரங்கை விட்டு வெளியேறினர்.

இந்த சம்பவம் கோலாலம்பூரில் முத்து திரைப்படம் ஓடிக்கொண்டிருக்கும் நான்கு திரை அரங்குகள் ஒன்றில் நேற்று முன்தினம் .இரவு 10.45 மணியளவில் நிகழ்ந்தது.

அடிதடி சம்பவம் நடப்பதற்கு முன்பு இரவு 8.30 மணிக்கான காட்சிக்கு அரங்கம் நிறைய கூட்டம் இருந்த வேளையில் 9.15 மணிக்கான காட்சியின் டிக்கெட்டுகளும் விற்று முடிந்த நிலையில் முத்து திரைப்படத்தை அரங்கில் கூடியிருந்த ரசிகர்கள் கண்டுகளித்துக் கொண்டிருந்த வேளையில் காலிக் கும்பல்களின் கூச்சல் மற்றும் கொச்சை வார்த்தைகள் ரசிகர்களிடையே அருவருப்பை ஏற்படுத்தியது.

இருப்பினும் அந்த காலிக் கும்பல்களின் அட்டகாசமான நாகரிக மற்ற செயல்களின் நடுவே ரசிகர்கள் திரைப்படத்தை ரசித்துக்கொண்டு இருந்தனர்.

முத்து திரைப் படத்தின் இடைவேளைக்குப் பிறகு ரசிகர்கள் அடுத்த காட்சியை பெறும் ஆவலோடு எதிர்பார்த்துக்கொண்டிருந்த வேளையில் திடீர் என்று ஆடவன் ஒருவன் எழுந்து மற்றொரு நபரை கன்னத்தில் பளார் என்று அறைந்ததைத் தொடர்ந்து இரண்டு கும்பல்களுக்கு மிடையே கடுமையான அடிதடி சண்டை ஏற்பட்டது.

இரண்டு கும்பல்களுக்கு மிடையே நிகழ்ந்த சண்டையைக் கண்ட ரசிகர்கள் பயத்தில் அலறிய வேளையில் இரண்டு கும்பல்களின் இடையிலிருந்த ஒருவன் ரசிகை மீது விழுந்ததினால் ஆத்திரமடைந்த அந்த பெண்மணி உங்கள் சண்டையை வெளியில் வைத்துக் கொள்ளுங்கள். எங்களை நிம்மதியாகப் படம் பார்க்க விடுங்கள் என சத்தம் போட்டதைத் தொடர்ந்து ஒரு கும்பல் அரங்கைவிட்டு வெளியேறியது.

பின்னர் ஐந்து நிமிடம் கழித்து உள்ளே நுழைந்த அந்த கும்பல் மீண்டும் இருக்கையில் அமர முயன்றபோது ஏம்பா இந்த சண்டை என்று கேட்டபோது இது சண்டையா? இது தமாஷ், இனிமேல்தான் சண்டை. .அவனுங்க படம் முடிந்து எப்படி வெளியே போகிறார்கள் என்று பார்த்துவிடுகிறோம் என்று கூறியவர்கள் இருட்டில் ஆட்களைத் தேடினர்.

இந்த பேச்சைக் கேட்டவுடன் எழுந்த நபர் ஒருவர் மற்றொருவரை முகத்தில் குத்தியதால் , மீண்டும் கடுமையான வாக்கு வாதமும் சண்டையும் ஏற்பட்டபோது ரசிகர்கள் பெரும் அச்சம் அடைந்து சிலர் அலறிக்கொண்டு அரங்கை விட்டு வெளியேறினர்.

அதன் பின்னர் திடீர் என்று அரங்கை விட்டு வெளியேறிய சுமார் ஏழு அல்லது எட்டு நபர்கள் சில நிமிடங்கள் கழித்து மீண்டும் உள்ளே நுழைந்து எங்கே அவன்? எங்கே அவன்? என்று அலறிக்கொண்டு வந்தபோது முத்து திரைப்படம் இறுதிக் கட்டத்தை நெருங்கிக் கொண்டிருந்தது. இவ்வேளையில் திரையரங்கின் அதிகாரிகள் போலீசாருக்கு தகவல் கொடுத்ததைத் தொடர்ந்து இரண்டு புரோட்டன் சாகா கார்களில் 5 போலீஸ்காரர்கள் திரை அரங்கிற்கு வந்தனர்.

கையில் தானியங்கி துப்பாக்கிகளுடனும் கைத்தடிகளுடனும் வந்த போலீசாரைக் கண்ட இரண்டு கும்பல்களும் எவ்வித சத்தமும் இன்றி அமைதியாகி விட்டன.

அதன் பின்னர் ரசிகர்கள் நிம்மதியாகப் படம் பார்த்துக்கொண்டிருந்த வேளையில் வெளியே வந்த போலீசார் படம் முடியட்டும் பின்னர் பார்த்துக் கொள்வோம் என்று கூறி அரங்கைவிட்டு வெளியேறினர்.

முத்து படம் முடிந்த பின்னர் போலீசார் கைது நடவடிக்கை எதனையும் மேற்கொண்டனரா என்பதை உறுதிப்படுத்த முடியவில்லை.



படிப்பகம்

அரசியல் தலைவர்களின் உடனடி நடவடிக்கை தேவை

# இந்திய இளைஞர்களிடையே குற்றச் செயல்

## நான்கே ஆண்டுகளில் 1007 பேர் கொலை

'3/12/95 TN

## ஸ்ரீ சுருதி மகளிர் நல மன்ற தலைவர் டத்தின்ஸ்ரீ இந்திராணி சாமிவேலு முயற்சி

(பேர்னாமா நிருபர் ஏ. சண்முகம்)

கோலாம்பூர்: டிச. 13- இந்திய இளைஞர்கள் குற்றச்செயலில் ஈடுபடும் சம்பவம் நாளுக்கு நாள் கூடி வருவது கவலை அளிக்கக்கூடியதாக உள்ளது.

அதிகமான இந்திய இளைஞர்கள் அடி தடி சண்டைகளாலும் குண்டர் கும்பல் தாக்குதலாலும் மரணமடைந்துள்ளது அதிர்ச்சியை ஏற்படுத்துகிறது.

இந்த நிகழ்வால் சம்பந்தப்பட்ட குடும்பங்கினர்களுள் 598 பேரும் தாக்குதலாலும், குண்டர் கும்பலாலும் தாக்கப்பட்டு இறந்துள்ளனர் என தெரிய வந்துள்ளது.

1 கோடி 80 லட்சம் ஜனத்தொகை கொண்ட மலேசியாவில் இந்தியர் களின் எண்ணிக்கை 15 லட்சம்தான். இருந்தும் குற்றச்செயலில் இந்திய இளைஞர்களின் பங்கு அதிக அளவில் உயர்ந்துள்ளது கவலை யளிக்கக்கூடியதாக உள்ளது.

இந்திய இளைஞர்கள் ஈடுபட்ட கொலைச் சம்பவங்கள் அதிகமாகளே சம்பந்தப்பட்டுள்ளனர் என்பது குறிப்பிடத் தக்கது.

கொலைச் சம்பவங்களில் மட்டுமில்லாது கற்பழிப்பு, சிறார் கொடுமை, போதைப் பித்தர்களாவது, தற்கொலை போன்ற குற்றச்செயல்களும் இந்திய இளைஞர்களிடையே இப்போது ஊடுருவி வருகிறது.

1991ஆம் ஆண்டு குண்டர் கும்பலைச் சேர்ந்த ஒரே இந்தியரை மட்டும் போலீசார் கைது செய்துள்ளனர். மேலும் 79 சீனர்கள் கைதாயினர். இதைக் கருத்தில்கொண்டு கருத்தில் கொண்டு இது குறித்து அதிர்ச்சி தெரிவித்துள்ளார். நிவர்த்திகாண ஆவன செய்வதாகவும் கூறியிருக்கிறார்.

அடங்கிய மகஜர் ஒன்றை வழங்கினார். பினாங்கு பயனீட்டாளர் சங்கமும் இதற்கான நடவடிக்கைகளை போலீஸ்

### இந்திய இளைஞர்கள் குண்டர் கும்பலில் அதிக ஈடுபாடு

கள் கணவனையோ, மனைவியையோ, பிள்ளைகளையோ அல்லது சகோதரர்களையோ இழந்து பரிதவிக்கும் நிலையும் ஏற்படுகிறது.

1990ஆம் ஆண்டு முதல் 1993ஆம் ஆண்டு வரை தாக்குதலாலும், குண்டர் கும்பலால் தாக்கப்பட்டு இறந்த இந்திய இளைஞர்களின் எண்ணிக்கை 1,007 என புக்கிட் அமான் போலீஸ் தலைமையக புள்ளி விபரங்கள் காட்டுகிறது.

அதேபோல பிற இன இளைஞர்களை எடுத்துக் கொண்டால் மலாய்க்காரர்களில் 343 பேரும், நிகழ்ந்த மாநிலமாக முதலிடம் பெறுவது சிலாங்கூர் மாநிலம். 383 கொலைச் சம்பவங்கள் சிலாங்கூர் மற்றும் தலைநகரில் நிகழ்ந்துள்ளது போலீஸ் புள்ளி விபரங்கள் வழி தெரிய வந்துள்ளது.

பகாங் மாநிலத்தில் 139 கொலைச் சம்பவங்களும்,

நெகிரியில் 119 சம்பவங்களும், ஜோகூரில் 99 சம்பவங்களும், பேரா மாநிலத்தில் 86 சம்பவங்களும், கெடாவில் 70 சம்பவங்களும் மற்றும் பினாங்கில் 69 கொலைச் சம்பவங்களும் நிகழ்ந்துள்ளன. இவை அனைத்திலும் இந்திய இளைஞர் பார்த்தால் இரகசிய குண்டர் கும்பலில் இந்திய இளைஞர்கள் இல்லாதது போல இருக்கிறதல்லவா?

குண்டர் கும்பலில் இந்திய இளைஞர்கள் பங்குகொண்டு அதன்வழி பல குற்றச்செயல்களில் ஈடுபட்டு வருவது பத்திரிகை செய்தி வழியாகவும் நேரிடையாகவும் காணும் வேளை, போலீஸ் தரப்பில் சொல்லப்பட்ட கருத்து அதிர்ச்சியையே ஏற்படுத்துகிறது.

இந்திய இளைஞர்களிடையே குற்றச் செயல் அதிகரித்துள்ளதை மஇகா தேசியத் தலைவர் டத்தோஸ்ரீ டாக்டர் ச. சாமிவேலு- அவர்கள்



கற்பழிப்பு வழக்கு

அதேபோல ஸ்ரீ சுருதி மகளிர் நலமன்ற சார்பில், போலீஸ்துறை உடனடி நடவடிக்கை மேற்கொள்ளவேண்டி மன்றத் தலைவர் மகளிர் மாமணி டத்தின்ஸ்ரீ டாக்டர் இந்திராணி சாமிவேலு அவர்கள் கடந்த வாரம் அரச மலேசிய போலீஸ் படைத் துணைத் தலைவர் டத்தோ சம்சூரி பின் ஹாஜி அர்சாட்டிடம் 5 அம்ச தீர்மானங்கள் துறை துரிதப்படுத்த கேட்டுக் கொண்டிருக்கிறது.

நாட்டில் இந்திய இளைஞர்களைக் கொண்ட 51 இரகசிய குண்டர் கும்பல் இயங்கி வருவதாகவும் இதில் 15 வயது முதல் 30 வயதுக் குட்பட்ட இந்திய இளைஞர்கள் செயல் பட்டு வருவதாக ம.இ.கா. இளைஞர் பகுதி தேசியத் தலைவர் டத்தோ எம். செல்லத்தேவன் கடந்த ஆண்டு கூட்டத்தில் குறிப்பிட்டுள்ளதையும் கவனத்தில் கொள்ள வேண்டும்.

இந்திய இளைஞர்கள் குற்றச்செயலில் ஈடுபடுவதைக் கவனத்தில் கொள்ள வேண்டிய ஒன்று என தேசியத் தலைவர் டத்தோஸ்ரீ டாக்டர் ச. சாமிவேலு கூறியிருப்பதைக் கொண்டு, நாட்டிலுள்ள ம.இ.கா. தலைவர்கள் அவருக்கு உறுதுணையாக நடவடிக்கைகள் மேற்கொள்ள முன்வரவேண்டும்.

குடிசைப் பகுதியில் வாழும் இந்திய இளைஞர்களே அதிக அளவில் குற்றச்செயலில் ஈடுபட்டு வருவதாக பெர்னாமாவுக்கு அளித்த பேட்டியில் டத்தோஸ்ரீ சாமிவேலு குறிப்பிட்டுள்ளார்.

**1990 முதல் 1993ஆம் ஆண்டுவரை இந்திய இளைஞர்கள் கொலை சம்பவத்தில் ஈடுபட்ட விபரம்:**

| மாநிலம் | கொலை எண்ணிக்கை |
|---|---|
| சிலாங்கூர் | 383 |
| பகாங் | 139 |
| நெகிரி | 119 |
| ஜோகூர் | 99 |
| பேரா | 86 |
| கெடா | 70 |
| பினாங்கு | 69 |

இந்தியஇளைஞர்கள் குற்றச்செயல்களில் ஈடுபாடு கொண்டுள்ளதைக் கண்ட ஸ்ரீ சுருதி மகளிர் நலமன்றம் இருப்பினும் சில நேரங்களில் பழிவாங்கும் படலத்திற்காக குண்டர்களை உபயோகப் படுத்தி வருவதாகவும்

## தமிழ்த் திரைப்படமும் ஒரு காரணமாக கொள்ளலாம்

கல்வியில் நாட்டம் கொள்ளாத மற்றும் வேலையின்றி திரியும் இந்திய இளைஞர்களே குற்றச்செயலில் ஈடுபாடு கொண்டுள்ளது தெரிய வருகிறது. அவர்களை அடையாளம் கண்டு அவர்கள் குறையை நிவர்த்தி செய்து முறையான வாழ்க்கையை அமைத்து தர ம.இ.கா. முயலும் எனவும் டத்தோஸ்ரீ குறிப்பிட்டுள்ளார்.

எனவே, ம.இ.கா. தலைவர்கள் டத்தோஸ்ரீ சாமிவேலு அவர்களின் முயற்சிக்கு முழு ஆதரவு நல்க முன்வரவேண்டும். அப்போது தான் மேற்கொள்ளப்படும் நடவடிக்கை வெற்றியடைய வாய்ப்புண்டு.

மாபெரும் கருத்தரங்கை நடத்தி பலரது பாராட்டைப் பெற்றது.

மன்றத் தலைவர் டத்தின்ஸ்ரீ இந்திராணி சாமிவேலு தலைமையேற்ற இந்த கருத்தரங்கில் நாடு முழுவதிலிருந்து பலர் கலந்து கொண்டனர். அரச மலேசிய போலீஸ் படை, தகவல் அமைச்சும் இந்த கருத்தரங்கிற்கு ஆதரவு கரம் நீட்டி வெற்றி பெறச் செய்தது.

தோட்டப்புறங்களில் உள்ள நடுத்தர குடும்பத்தைச் சேர்ந்த இந்திய இளைஞர்களிடையே குற்றச்செயல்கள் குறைவாக வே உள்ளதாக தேசிய தோட்டத் தொழிற்சங்கச் செயலாளர் ஜி. சங்கரன் கூறுகிறார்.

அவர் கோடி காட்டியுள்ளார்.

தமிழ்த் திரைப்படங்களில் ஆபாச மற்றும் வன்செயல் காட்சிகள் அதிகம் இடம்பெறுவதால் இந்திய இளைஞர்களிடையே குற்றச்செயல் பெருகி யுள்ளனதாக கருத்தரங்கில் விவாதிக்கப்பட்டது.

இந்திய இளைஞர்கள் குற்றச்செயலில் ஈடுபாடு கொண்டுள்ளதை கருத்தில் கொண்டு நிவர்த்தி செய்ய இந்திய அரசியல், சமூக அமைப்புகள் ஒன்றிணைந்து செயல்பட முன்வர வேண்டும்.

தவறினால் குற்றச்செயலில் இந்திய இளைஞர்கள் ஈடுபடுவது அதிகரிக்கும் அபாயம் உள்ளது.

www.padippakam.com

எம். சின்னப்பன்

## குடிவெறி கணவனின் அராஜகம்

# குடும்பமாதுவுக்கு கத்தி வெட்டு!

மூவார், ஜன. 27-

குடிவெறியில் சொந்தக் கணவரால் பாராங்கத்தியால் தாக்கப்பட்டு உடல் முழுவதும் பலத்த வெட்டுக் காயங்களுக்கு இலக்கான இந்திய குடும்ப மாது ஒருவர் ஜொகூர்பாரு சுல்தானா அமீனா பொது மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு உயிருக்கு போராடி வருகிறார்.

இச்சம்பவம் நேற்று முன்தினம் மாலை 2.30 மணியளவில் தங்காக் சாகில் தோட்டத்தில் நிகழ்ந்ததாக மாவட்ட போலீஸ் தலைவர் முகமட் பாசீர் நிமாட் அலி கூறினார்.

இச்சம்பவத்தில், பாதிக்கப்பட்டவர் தோட்டத் தொழிலாளியான திருமதி ஏ. கமலா தேவி (வயது 27) என போலீசார் கூறினர்.

சம்பவம் நிகழ்ந்த அன்று 31 வயது மதிக்கத்தக்க கமலா தேவியின் கணவர், அளவிற்கு அதிகமான மது அருந்தி விட்டு நடக்க முடியாமல் தள்ளாடி தள்ளாடி வீட்டிற்கு வந்திருக்கிறார். இவரின் இந்த செய்கையைக் கண்ட அவரது மனைவி, 'ஏன் இப்படி குடித்து விட்டு வந்து, மற்றவர்கள் நம்மை பார்த்து சிரிக்கும்படி நடந்து கொள்கிறீர்கள் என்று கூறியிருக்கிறார்.

குடிவெறியில் இருந்த அவரது கணவர் தம் மனைவி கூறிய இந்த வார்த்தைகளை ஜீரணிக்க முடியாமல், ஆத்திரமடைந்து ஒரு கனம் தன்னையே இழந்து, சமையற்கட்டிற்குச் சென்று பாராங்கத்தியைக் கொண்டு வந்து கடுமையாக மனைவியை வெட்டியிருக்கிறார்.

இதனால் தலை, கை மற்றும் உடல் பகுதியில் பல ஆழமான வெட்டுக்காயங்கள் ஏற்பட்டு ரத்தம் பீறிட்ட நிலையில், உதவிகோரி வீட்டின் வெளியே ஓடியிருக்கிறார்.

பாராங்கத்தியுடன் அவரது கணவரும் வெளியே ஓடி வந்து 'யாராவது என் மனைவிக்கு உதவி செய்ய வந்தால், உங்களுக்கும் இந்த கதிதான் ஏற்படும் என கூறி இருக்கிறார். பாராங்கத்தியுடன் இருந்த அவரை பார்த்தவர்கள் யாரும் உதவி செய்ய முன்வரவில்லை.

அரை மணி நேரம் கழித்து, பாராங்கத்தியுடன் இருந்த நபர் சுவரில் சாய்ந்தவாறு தூங்கியதைக் கண்டவர்கள், கமலாதேவியை தங்காக் மருத்துவமனைக்கு கொண்டு சென்று அனுமதித்தனர்.

மருத்துவமனையில் சேர்க்கப்பட்ட அவருக்கு சிகிச்சையளிக்கப்பட்டது. மேலும் தீவிர சிகிச்சையளிக்க, அவரை ஜொகூர்பாரு சுல்தானா அமீனா பொது மருத்துவமனைக்கு கொண்டு சென்றனர்.

தீவிர சிகிச்சையளிக்கப்பட்டு வரும் கமலாதேவிக்கு அதிக அளவில் ரத்தம் வெளியேறியதால், அவரது உடல் நிலை அபாய கட்டத்தில் உள்ளதாக மருத்துவமனை பேச்சாளர் ஒருவர் கூறினார்.

இதனிடையே, மூவார் மாவட்ட போலீசார் 31 வயது மதிக்கத்தக்க, கமலா தேவியின் கணவரை கைது செய்ததுடன் பாராங்கத்தி ஒன்றையும் கைப்பற்றியதுடன், மேல் விசாரணைக்காக அவரை காவலில் தடுத்து வைத்துள்ளனர் என்று மாவட்ட போலீஸ் தலைவர் முகமட் பாசீர் நிமாட் அலி கூறினார்.



படிப்பகம்

www.padippakam.com

# பணம் கேட்டு முன்னாள் ஆசிரியரை
# பிளேடால் வெட்டி காயப்படுத்தினான்

(எம்.எல். மாறன்)

சுங்கைப்பட்டாணி, டிச. 17-

வீட்டில் யாரும் இல்லாத சமயத்தில் பின்வழி புகுந்த அடையாளம் தெரியாத இந்திய ஆடவன் ஒருவன் பணம் கேட்டு முன்னாள் ஆசிரியர் ஒருவரை பிளேட் கத்தியினால் வெட்டி காயப்படுத்தினான்.

இச்சம்பவம் நேற்று முன்தினம் இரவு மணி 9.00 அளவில் இங்குள்ள ஜாலான் கொளம் ஆயர் பகுதியில் நிகழ்ந்தது.

சென்டிசா மற்றும் சின் மின் இடைநிலைப் பள்ளியில் ஆசிரியராக பணிபுரிந்து ஓய்வுபெற்ற திரு.வி.ஜி. பெரைரா (வயது 64) என்பவரே வெட்டுக் காயங்களுக்கு உள்ளானார்.

சம்பவத்தின் பொழுது திரு. விஜி. பெரைராவின் மனைவி திருமதி வி.ஜி. லில்லி பெரியரா (வயது 63) அருகே உள்ள தேவாலயத்திற்கு பிரார்த்தனைக்காக சென்றுவிட்டார்.

வீட்டின் முன் "அண்டி, அண்டி" என்று



காயங்களுக்குள்ளான வி.ஜி. பெரைரா.

குரல் கேட்க முன் வாசலுக்கு வந்த திரு. பெரைரா பின்புறமிருந்து கண்ணாடிகள் உடையும் சத்தம் கேட்டு பின் வாசலை திறக்க முயன்றபோது 30 வயது மதிக்கத்தக்க இந்திய ஆடவன் ஒருவன் கவச தொப்பியினை அணிந்து கொண்டு உள்ளே தள்ளி நுழைந்தான். கையில் பிளேட்டு கத்தியினை வைத்துக் கொண்டு அவரிடம் பணம் கேட்டான். திரு. பெரைரா கொடுக்க மறுக்கவே தான் வைத்திருந்த கத்தியினால் அவரை உடலின் பல பாகங்களில் சீவினான்.

திரு. பெரைரா சத்தமிடவே அக்கம் பக்கம் உள்ளவர்கள் வீட்டின் முன் வாசலில் வரு வதை அறிந்த அந்த ஆடவன் அங்கிருந்து வந்த வழியாக தப்பி ஓடிவிட்டான்.

பிரார்த்தனை முடிந்து வீடுதிரும்பிய திருமதி வி.ஜி. லில்லி பெரைரா ரத்த வெள்ளத்தில் இருப்பதைக் கண்டு அதிர்ச்சியடைந்து உடனடியாக அவரை மாவட்ட மருத்துவமனைக்குக் கொண்டு சென்றார்.

நேற்று காலையில் அவர் மருத்துவமனையிலிருந்து வீடு திருப்பினார். இச்சம்பவம் குறித்து போலீசார் தீவர விசாரணை மேற்கொண்டு வருகின்றனர்.

மூன்று ஆண்டுகளுக்கு முன்பாகதான் முதியவர் சின்னையா என்பவர் கொளம் ஆயர் பகுதியில் உள்ள வீட்டில் கொலை செய்யப்பட்டார் என்பது குறிப்பிடத்தக்கதாகும். மேலும் அப்பகுதியில் அதிகமானோர் வேலையிலிருந்து ஓய்வு பெற்றவர்கள் இருக்கின்றார் என்றும் இங்கு தெரிவிக்கப்பட்டது.



படிப்பகம்

www.padippakam.com



சிகரெட் துண்டினால் சூடு வைக்கப்பட்ட இடத்தை டி. ராமசாமி சுட்டிக்காட்டுவதை படத்தில் காணலாம்.

### குண்டர் கும்பலின் சித்ரவதைக்கு ஆளானார்

# ராமசாமியை கொல்ல முயற்சி!

**உடல் முழுக்க சிகரெட் துண்டினால் சூடு**
**கம்போங் காந்தனில் நிகழ்ந்த சம்பவம்**

(பி. ஜே. மாரியப்பன்)

பெட்டாலிங்ஜெயா, டிச. 30-

குண்டர் கும்பல் ஒன்றின் பிடியில் சிக்கிய ஆடவர் ஒருவர் உடல் முழுக்க சிகரெட் துண்டினால் சூடுவைக்கப்பட்டு கைகால் கட்டப்பட்ட நிலையில் உயிரோடு குட்டையில் இறக்கப்பட்ட வேளையில் அதிர்ஷ்டவசமாக உயிர் தப்பினார்.

இந்த சம்பவம் கடந்த டிசம்பர் 19ஆம் தேதி பிற்பகல் 2 மணியளவில் இங்கு கம்போங் காந்தன் டாலாம், ஜாலான் பூச்சோங் 8ஆவது மைலில் நிகழ்ந்தது.

குத்தகைத் தொழிலாளியான டி. ராமசாமி (வயது 43) என்பவரே இந்த பயங்கர கொடுமைக்கு இலக்காகி இருக்கிறார்.

சம்பந்தப்பட்ட தினத்தன்று மதிய உணவு வாங்குவதற்கு ஜாலான் பூச்சோங் 8ஆவது மைலில் உள்ள கடை ஒன்றுக்கு ராமசாமி சென்ற வேளையில் ஐவர் அடங்கிய இந்திய குண்டர் கும்பல் ஒன்று கத்தி முனையில் அவரை மடக்கி இருக்கிறது.

பின்னர் ராமசாமியை தர தரவென்று இழுத்துக் கொண்டு அருகிலுள்ள உணவகம் ஒன்றுக்குள் நுழைந்த அந்தக் கும்பல், அவரை கட்டிப் போட்டதாக ராமசாமி தமது போலீஸ் புகாரில் குறிப்பிட்டு இருக்கிறார்.

உணவகத்தின் தனி அறையில் இந்த சம்பவம் நிகழ்ந்ததால் தம்மால் உதவி கோர முடியவில்லை என்று குறிப்பிட்ட அவர், சம்பந்தப்பட்ட கும்பல் தம்மை நிர்வாணமாக்கி உடல் முழுவதும் சூடு வைத்ததாகவும் குறிப்பிட்டார்.

சிகரெட் துண்டினால் சூடு வைக்கும்போது தம்முடைய வாயில் துணி வைத்து அடைக்கப்பட்டதாகவும் அவர் குறிப்பிட்டார். பின்னர் போத்தல் நிறைய இருந்த கிச்சாப்பை தனது வாய்க்குள் ஊற்றி வலுக்கட்டாயமாக அந்த கும்பல் குடிக்க வைத்ததாகவும் அவர் கூறினார்.

தாம் சங்கிலியை திருடியதாக குற்றஞ்சாட்டி, இத்தகைய சித்ரவதையை செய்த அந்தக் கும்பல் பின்னர் தம்மை இழுத்துக்கொண்டு அருகிலுள்ள குட்டைக்கு சென்று கைகால்களை கட்டி தம்மை உயிரோடு தண்ணீருக்குள் இறக்க முயன்றதாகவும் ராமசாமி கூறினார்.

எனினும் அச்சமயத்தில் காரில் ரோந்து போலீசார் அப்பகுதியில் வருவதைக்கண்ட அக்கும்பல், உடனே அந்நபரை குட்டையிலிருந்து தூக்கி கை கால்களில் கட்டப்பட்டிருந்த கயிற்றை அவிழ்த்து விட்டிருக்கின்றனர்.

பின்னர் தங்களுடைய சங்கிலியை அந்நபர் திருடி விட்டதாக கூறி, அவரை அக்கும்பல் போலீஸ்காரர்களிடம் ஒப்படைத்ததாக புகாரில் கூறப்பட்டுள்ளது.

தாம் சங்கிலியை திருடவில்லை. மாறாக குண்டர் கும்பலுக்கு பணம் தரவில்லை என்று கூறி அந்த கும்பல் தம்மை சித்ரவதை செய்ததாகவும் ராமசாமி பெட்டாலிங் ஜெயா போலீசில் புகார் செய்தார்.

படிப்பகம்

www.padippakam.com

## கிள்ளானில் போலீஸ் நடவடிக்கை:

# 321 பேர் கைது!

## 33 பேர் இந்தியர்கள்

(பி. தமிழ்ச்சகாயம்)

கிள்ளான், ஜூன் 5- கோலக்கிள்ளான் வட்டாரத்தில் போலீசார் திடீர் சோதனை நடவடிக்கையில் ஈடுபட்டிருந்தபோது மொத்தம் 321 பேரை கைது செய்துள்ளனர் என கிள்ளான் மாவட்ட தலைமை போலீஸ் அதிகாரி துணை ஆணையாளர் துவான் அஜிஸ் அரியராசா கூறினார்.

மொத்தம் 50 போலீஸ் அதிகாரிகள் கோலக்கிள்ளான் பகுதியிலுள்ள சுங்கை ஆவுர், கம்போங் பிராங்கான், கம்போங் சாமி, பண்டார் சுல்தான் சுலைமான் மற்றும் கோலக்கிள்ளான் பட்டணம் ஆகிய பகுதிகளில் சோதனை மேற்கொண்டனர்.

இவர்களில் 21 பேர் போதைப் பித்தர்கள், நூறு பேர் வெளிநாட்டவர்கள். முக்கிய தஸ்தாவேஜுகள் இல்லாதவர்கள் மற்றும் நூற்றுத் தொன்னூற்றொன்பது பேர் உள்ளூர்வாசிகள் என துவான் அஜீஸ் தெரிவித்தார்.

இங்குள்ள கடை வீட்டுப் பகுதிகளை சோதனையிட்டபோது, ஒரு வீடியோ கடை லைசென்ஸ் இல்லாமல் செயல்பட்டு வந்தது. அந்தக் கடைக்காரரையும் வீடியோவையும் கைப்பற்றி 1976ஆம் ஆண்டு திரைப்பட சட்டம் 10இன் கீழ் சம்மன் கொடுக்கப்பட்டுள்ளதாக துவான் அஜிஸ் கூறினார்.

இந்தக் கடை கோலக்கிள்ளான் ஜாலான் பிராங்கான், லோரோங் தெம்பினிஸ் எனும் இடத்தில் செயல்பட்டு வந்தது.

பிடிபட்ட 321 பேரில் போலீசாரால் தேடப்பட்டு வந்த 33 வயது இந்தியர் ஒருவரும் அடங்குவார்.

1992ஆம் ஆண்டு கோலக்கிள்ளான் பண்டார் சுல்தான் சுலைமானில் நடைபெற்ற திருட்டு சம்பவத்தில் ஈடுபட்டுள்ளவரென அடையாளம் காணப்பட்டுள்ளார் என கிள்ளான் தலைமை போலீஸ் அதிகாரி கூறினார்.

இந்த நடவடிக்கையின் நோக்கம் என்னவென்று கேட்டபோது, கிள்ளான் வட்டாரத்தில் குற்றச்செயல்களை குறைப்பதற்கு எடுக்கும் நடவடிக்கை என்று அஜிஸ் கூறினார்.

இது மூன்றாவது நடவடிக்கை எனவும் முதல் நடவடிக்கையாக கிள்ளான் ஜாலான் கோஹொக்குவாட்டிலும் இரண்டாவது நடவடிக்கையாக காப்பார் பகுதிகளிலும் சோதனையிட்ட பிறகு, இப்போது அந்தப் பகுதிகளில் குற்றச் செயல்கள் 20 முதல் 30 விழுக்காடு குறைந்துள்ளதாக தெரிவித்தார்.

பிடிபட்டவர்கள் பதினெட்டு வயது முதல் ஐம்பது வயதுக்குட்பட்டவர்களெனவும் அதிகமானோர் இளைஞர்களெனவும் தெரிவித்தார்.

இதற்கிடையில் கடந்த 1.6.95ஆம் நாள் கிள்ளான் போலீசார் மேற்கொண்ட திடீர் சோதனை நடவடிக்கையில் கிள்ளான் ஜாலான் காப்பாரில் முடிதிருத்தும் நிலையத்தை நடத்தி வந்த இரண்டு பெண்களை கைது செய்துள்ளதாக துவான் அஜிஸ் கூறினார்.



படிப்பகம்

www.padippakam.com

நாடு முழுவதும் 16,158 இந்திய போதைப்பித்தர்கள்

# 1453 இந்திய குண்டர் கும்பல்கள்

டத்தோஸ்ரீ மெகாட் ஜுனிட் தகவல்

**(ஆனந்தன்)**

கோலாலம்பூர், செப். 24- போதைப் பொருள் பழக்கத்திற்கு அடிமையான 16,158 இந்தியர்கள் போதைப்பித்தர் மறுவாழ்வு மையத்தில் சிகிச்சை பெற்று வருவதாக உள்துறை துணையமைச்சர் டத்தோ மெகாட் ஜுனிட் மெகாட் ஆயோப் தெரிவித்தார்.

மேலும் 1453 இந்தியர் குண்டர் கும்பல்கள் நாடு முழுவதும் செயல்பட்டு வருவதானது கவலை அளிக்கக்கூடிய வகையில் இருப்பதாக இங்கு கூட்டரசு பிரதேச ம.இ.கா.வும்

(19-ம் பக்கம் பார்க்க)

(முதல் பக்கத் தொடர்ச்சி)

மலேசிய போதைப் பொருள் எதிர்ப்பு அமைப்பான பெமாடாமும் ஏற்பாடு செய்த போதைப் பொருள் தடுப்பு மீதான கருத்தரங்கை அதிகாரபூர்வமாக தொடக்கி வைத்து பேசியபோது அவர் மேற்கண்டவாறு கூறினார்.

இந்திய குண்டர் கும்பல்கள் நடவடிக்கை பினாங்கு மாநிலத்தில் அதிகமாக செயல்பட்டு வருவதாக கூறிய அவர் அம்மாநிலத்தில் மொத்தம் 433 சட்டவிரோத இந்தியர் குண்டர் கும்பல் செயல்பட்டு வருவதாக அவர் குறிப்பிட்டார்.

பினாங்கு மாநிலத்திற்கு வெளியே கெடாவில் 318, நெகிரி செம்பிலானில் 180, பேராவில் 179, கோலாலம்பூரில் 116, சிலாங்கூரில் 130 ஜோகூரில் 52 மற்றும் பகாங்கில் 46 என மொத்தம் 1453 குண்டர் கும்பல்கள் இந்திய இளைஞர்களைக் கொண்டு செயல்படுவ தாக அவர் தொடர்ந்து கூறினார்.

போதைப் பொருள் பழக்கத்திற்கு அடிமையான இந்தியர்களின் எண்ணிக்கை இந்நாட்டில் இருக்கக்கூடிய மொத்த இந்திய மக்கள் தொகையான 10 விழுக்காட்டினருடன் ஒப்பிடும்போது அதிகமாக இருந்து வருவதாக அவர் தெரிவித்தார்.

போதைப் பித்தர்களாக சாதாரண மக்கள் மட்டும் அல்லாமல் டான்ஸ்ரீ, டத்தோ நாடாளுமன்ற உறுப் பினரின் மகன்கள், விமானிகள், போலீஸ் காரர்கள் என அடிமையாகி உள்ளதாக அவர் கூறினார்.

இந்த சூழ்நிலை நீடித்தால் 2020 தூர நோக்கு மேம்பாட்டு திட்டத்தில் நாடு வளர்ச்சி அடையும் போது இந்திய சமூகம் வளர்ச்சியில் பங்கு பெற முடியாமல் பின் தங்கிவிடும் என்பது மறுப்பதற்கு இல்லை என்று டத்தோ மெகாட் ஜுனிட் கூறினார்.

இந்திய சமூக சீர்கேடுகளை களைவதற்கு ம.இ.கா., பொது இயக்கங்கள், பொது அமைப்புகள் தீவிர நடவடிக்கை எடுப்பது அவசியம் என அவர் சொன்னார்.

கொலை, கொள்ளை, கற்பழிப்பு போன்ற குற்றச் செயல்களுக்கு 1993 ஆம் ஆண்டு 2370 பேர் கைது செய்யப்பட்டு தண்டனை அனுபவித்து வருவதாக கூறிய துணை அமைச்சர் போதைப் பொருள் விநியோகம் செய்த குற்றத்திற்காக 93 இந்தியர்கள் கைது செய்யப்பட்டதாக அவர் மேலும் சொன்னார்.

விபசார நடவடிக்கையில் இந்திய பெண்கள் அதிகமாக இல்லாவிட்டாலும் 14 வயதுக்கு மேற்பட்ட பெண்களின் நடவடிக்கை குறித்து பெற்றோர்கள் கண்காணிப்பது அவசியம் என்று அவர் சொன்னார்.



படிப்பகம்

www.padippakam.com

# இரு இந்திய பெண்கள் அடிதடி!

## ஒருவருக்கு கத்தி வெட்டு

(எஸ்.டி. மணியம்)

தெலுக் இந்தான், ஜன. 12-
இங்கு அருகிலுள்ள ஒரு தோட்ட குடியிருப்புப் பகுதியில் இரண்டு குடும்ப மாதர்களுக்கு இடையே நிகழ்ந்த அடிதடியில் ஒருவருக்கு கத்தி வெட்டு விழுந்ததால் அவர் ஆபத்தான நிலையில் இங்குள்ள மாவட்ட மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இச்சம்பவம் நேற்று முன்தினம் மாலை 3.30 மணி அளவில் இங்கிருந்து 7 கி.மீ. தொலைவில் உள்ள நோவாஸ்கோசியா தோட்டத்தில் நிகழ்ந்தது.

சம்பவத்தன்று அந்த இரண்டு இந்திய குடும்ப மாதர்களுக்கு இடையே ஏதோ ஒரு விவகாரம் தொடர்பாக ஆரம்பத்தில் வாய்ச்சண்டை சிறிதாக ஆரம்பித்துள்ளது.

சிறிது நேரத்தில் வாய்ச் சண்டை அடிதடிக்கு வந்த போது ஆத்திரம் கொண்ட 40 வயது மதிக்கத்தக்க அவர்களில் ஒருவர் திடீரென்று கத்தியால் 36 வயதுடைய மற்றொரு மாதை தாக்க ஆரம்பித்துள்ளார்.

இதனைச் சிறிதும் எதிர்பாராத அம்மாதுக்குத் தலையில் ஆழமான வெட்டுக்காயம் ஏற்பட்டு ரத்தம் பீறிட்டு வந்தது.

இதைக் கண்ட சிலர் உடனடியாக அம்மாதை மாலை 4.00 மணி அளவில் இங்குள்ள மாவட்ட மருத்துவமனைக்குக் கொண்டு சென்றனர்.

அங்கு அவருக்குத் தீவிர சிகிச்சை அளிக்கப்பட்டு வரும் வேளையில் போலீசார் இது குறித்து புலன் விசாரணை மேற்கொண்டு வருகின்றனர்.

இன்னும் யாரும் இது தொடர்பாக கைது செய்யப்படவில்லை.



படிப்பகம்

www.padippakam.com

# "ஓய்" என்று அழைத்தவரை பீர் போத்தலால் தாக்கினார்!

## கணேசனுக்கு ஒருநாள் சிறை!

எம். தேவ்ராஜ்

கோலாலம்பூர், ஜூலை 22-

"ஓய்" என்று அழைத்த ஒருவரை பீர் போத்தலைக் கொண்டு தாக்கிக் காயப்படுத்தியதாக கணேசன் ராமசுந்தரம் (வயது 25) மற்றும் செல்வம் ரெங்கசாமி (வயது 29) ஆகியோர் குற்றஞ்சாட்டப்பட்டனர்.

கணேசன் குற்றச்சாட்டை ஒப்புக் கொண்டதைத் தொடர்ந்து அவருக்கு ஒருநாள் சிறையுடன் 1,500 வெள்ளி அபராதமும் விதிக்கப்பட்டது.

ஆனால், செல்வம் குற்றச் சாட்டை மறுத்து விசாரணை கோரினார். அடுத்த மாதம் 4ம் தேதி விசாரணை நிர்ணயிக்கப்பட்டது.

கடந்த மே மாதம் 15ம் தேதி இரவு மணி 8.30க்கு செந்தூல், பண்டார் பாரு சந்தையில் கணேசனும், செல்வமும் சேர்ந்து சோக் கொக் ஓன் என்பவரை பீர் போத்தலால் தாக்கி காயப்படுத்தியதாகவும், போத் தலை ஆயுதமாகப் பயன்படுத்திய தால் மரணம் விளைவித்திருக்கக் கூடும் என்று குற்றப் பத்திரிகையில் கூறப்பட்டுள்ளது.



படிப்பகம்

www.padippakam.com



## இந்தியர்களிடையே குற்றச் செயல் அதிகரிப்பு:

# அரசியல், பொது இயக்கங்கள் உதாரணமாக திகழ வேண்டும்!

## பெட்டாலிங்ஜெயா மாவட்ட போலீஸ் அறிவுறுத்து

பெட்டாலிங்ஜெயா, ஜன. 4-

இம்மாவட்டத்தில் இந்தியர்கள் மத்தியில் தொடர்ந்து அதிகரித்து வரும் அடிதடி மற்றும் கொலை போன்ற குற்றச்செயல்களுக்கு தீர்வு காணும் நடவடிக்கையில் இந்தியர்களை பிரதிநிதிக்கும் அரசியல் மற்றும் பொது இயக்கங்கள் ஈடுபட வேண்டுமென அறிவுறுத்தப்பட்டுள்ளன.

'இந்தியர்கள் சம்பந்தப்படும் குற்றச் செயல் எண்ணிக்கை இம்மாவட்டத்தில் தொடர்ந்து அதிகரித்து வருகிறது' என்று பெட்டாலிங் ஜெயா மாவட்ட குற்றப் புலனாய்வுப் பிரிவுத் தலைவர் டி.எஸ்.பி சைட் நட்சாரி சைட் வாசிர் நேற்று கூறினார்.

இந்தியர்களிடையே அடிக்கடி அடிதடி சம்பவங்கள் அதிகரித்து வருகின்றன. அதே போலவே கொலை சம்வங்களும் கணிசமான முறையில் அதிகரித்துள்ளன என்றார் அவர்.

இது போன்ற குற்றச் செயல்கள் நடக்காமலிருப்பதற்கு அரசியல் அமைப்புகளும், பொது அமைப்புகளும் முன் உதாரணமாக இருக்க வேண்டுமென அவர் அறிவுறுத்தினார்.

இவ்வாண்டு துவக்கத்திலேயே குண்டர் கும்பல் ஒன்றின் அராஜகத்திற்கு சுங்கை பூலோ, கம்போங் பொர்சத்துவில் பெ. சேகரன் (வயது 32) என்பவர் பலியாகி இருக்கிறார்.

மேலும் மூவருக்கு பலத்த காயங்கள் விளைவிக்கப்பட்டன.

நில பங்கீடு தொடர்பாக எழுந்த தகராறு காரணமாக சேகரன் படுகொலை செய்யப்பட்டதாக கூறப்படுகிறது. இக்கொலை நிகழ்வதற்கு முன்பதாக இரண்டு அரசியல் அமைப்புகளுக்கு இடையே தகராறு மூண்டதாக தெரிகிறது.

அடிதடி சம்பவங்களுக்கும் படுகொலை சம்பவங்களுக்கும் காரணமாக இருக்கும் சமூக பிரச்னைகளுக்கு தீர்வு காண அனைத்து தரப்புக்களுக்கு ஒத்துழைக்க முன்வர வேண்டும் என்று அவர் கூறினார்.

### காரணத்தை போலீஸ் ஆராய்கிறது.

இதற்கிடையே, சுங்கை பூலோ, கம்போங் பொர்சத்துவில் கடந்த வியாழக்கிழமை பின்னிரவு 1 மணி அளவில் சேகரன் ஆடவர் கும்பல் ஒன்றினால் படுகொலை செய்யப்பட்ட விவகாரம் தொடர்பாக போலீசார் தீவிர புலனாய்வில் ஈடுபட்டுள்ளதாக அவர் கூறினார்.

சம்பவம் நிகழ்ந்த அன்று பிற்பகல் 2.00 மணி அளவில் மாவட்ட அலுவலகத்தில் நிலம் பங்கீடு தொடர்பாக இரண்டு இந்திய தரப்புகளுக் கிடையே வாக்கு வாதம் மூண்டதாக தெரிகிறது.

அதன் பின், கம்போங் பொர்சத்துவில் அன்றிரவு பொதுக் கூட்டம் ஒன்று நடைபெற்றது.

அக்கம்பத்து தலைவர் திரு. குணசேகரன் தலைமையில் நடைபெற்ற அக்கூட்டத்தில் கொலையுண்ட சேகரனும் கலந்து கொண்டார்.

வழங்கப்பட்ட லாட் நிலங்களில் முறைகேடு நிகழ்ந்திருப்பதால் அதனை பெற வேண்டாம் என்று ஏகமனதாக முடிவெடுக்கப்பட்டது.

அக்கூட்டத்திற்குச் சென்று விட்டு வீடு திரும்பிய சேகரனை ஆடவர் கும்பல் ஒன்று சுத்தியலைக்கொண்டு தாக்கியது.

இச்சம்பவம் அதிகாலை மணி 1 அளவில் நிகழ்ந்தது. நிசான் சன்னி எனும் வெள்ளை நிற காரில் வந்திறங்கிய நால்வர் கொண்ட கும்பல் குளித்துக் கொண்டிருந்த சேகரனை தாக்கியது.

சேகரனை காப்பாற்ற ஓடி வந்த அவரது இரண்டு சகோதரர்களையும், அவரது மாமனான குணசேகரனையும் அக்கும்பல் தாக்கிக் காயப்படுத்தி விட்டு தப்பிச் சென்றது.

ரத்த வெள்ளத்தில் கோலாலம்பூர் பெரிய மருத்துவமனையில் சேர்க்கப்பட்ட சேகரன் சுய நினைவு திரும்பாமலேயே வெள்ளிக்கிழமை இரவு மணி 11.30க்கு மரணமடைந்தார்.

இது படுகொலை என வர்ணித்த அவர், இக்கொலையின் பின்னணியை போலீசார் ஆராய்ந்து வருவதாக டிஎஸ்பி சைட் நட்சாரி கூறினார்.

இந்த விவகாரம் தொடர்பாக மாவட்ட அலுவலகத்திடம் தகவல் பெறும் முயற்சியில் போலீசார் ஈடுபட்டிருப்பதாகவும் அவர் கூறினார்.

இப்படுகொலை தொடர்பாக இருவர் சந்தேகத்தின் பேரில் கைதாகி இருப்பதுடன், இது தொடர்பாக தகவல் தெரிந்தவர்கள் 03- 756222 என்ற தொலைபேசி எண்ணுடன் தொடர்பு கொண்டு தகவல் தரும்படி அவர் கேட்டுக் கொண்டார்.

படிப்பகம்

www.padippakam.com

எஸ். எம். குணாளன்

# நாள் ஒன்றுக்கு 30 பேர் பிடிபடுகிறார்கள்

# போதைப்பொருளுக்கு இந்திய இளைஞர்கள் பரவலாக அடிமை!

## டத்தோ மெகாட் வெளியிடும் தகவல்!

**கோலாலம்பூர், டிச. 18- இந்தியர்கள் மத்தியில் குற்றச் செயல்கள் அபாய கட்டத்தை அடைந்துள்ள வேளையில் போதைப் பொருளுக்கு மட்டும் 30 விழுக்காடு இந்திய இளைஞர்கள் அடிமையாகியுள்ளதாக திடுக்கிடும் தகவலை உள்துறை அமைச்சர் டத்தோமெகாட் ஜுனிட் நேற்று வெளியிட்டார்.**

ஒரு நாளைக்கு 10 விழுக்காடு இந்தியர்கள் பல்வேறு குற்றச்செயல்களுக்காக கைது செய்யப்படுகிறார்கள். அதேசமயம் போதைப் பொருள் சம்பந்தப்பட்ட குற்றச் செயல்களில் மட்டும் 30 விழுக்காடு இந்தியர்கள் குறிப்பாக இந்திய இளைஞர்கள் ஈடுபட்டு வரும் திடுக்கிடும் தகவலை டத்தோ மெகாட் நேற்று வெளியிட்டார்.

டத்தோ மெகாட் ஜுனிட் இங்கு ஐ.பி.எப் கட்சியின் ஏற்பாட்டில் நடைபெற்ற 'கண்ணியமான சமுதாயம் காண்போம்' என்னும் கருத்தரங்கை தொடக்கி வைத்து உரையாற்றினார். அவர் மேலும் பேசியதாவது:-

### நான் சொன்ன தகவல்!

இந்தியர்கள் மத்தியில் நிலவி வரும் குற்றச்செயல்கள் குறித்த எனது அறிக்கை இன்று உண்மையாகி விட்டது. இந்தியர்களிடையே நிலவி வரும் இந்த குற்றச்சாட்டுக்கு தனி நபர் யாரும் பொறுப்பேற்க வேண்டாம். யார் மீதும் பழியும் சுமத்த வேண்டாம். அனை வரும் ஒன்றிணைந்து இந்திய இளைஞர்களை நல்வழிப்படுத்த வேண்டும்.

ஒவ்வொரு நாளும் இந்தியர்களிடையே நிலவி வரும் குற்றச் செயல்கள் அதிகரித்து வருவது வருத்தமளிக்கக்கூடிய விஷயமாகும். ஒவ்வொரு நாளும் 10 விழுக்காடு இந்திய இளைஞர்கள் பல்வேறு குற்றச் செயல்களுக்காக கைது செய்யப்படுகின்றனர். போதைப் பொருளுக்கு மட்டும் 30 விழுக்காடு இந்திய இளைஞர்கள் அடிமையாகி வருகின்றனர். இது களையப்பட வேண்டும்.



### குண்டர் கும்பல்

இந்திய இளைஞர்கள் மத்தியில் குண்டர் கும்பல் குற்றச் செயல்கள் மிகவும் அதிகமாக நிகழ்ந்து வருகிறது. இந்தியர்கள் தங்களுக்குள்ளாக-வே தாக்கிக் கொள்கின்றனர். ஒரு இந்திய குண்டர் கும்பல் மற்றொரு இந்திய குண்டர் கும்பலுடன் சண்டையிட்டுக் கொள்கின்றனர். அண்மைய காலமாக தோட்டப்புறங்களில் நிகழ்ந்த சில சம்பவங்களில் இந்திய குண்டர் கும்பல் வங்காள தேச தொழிலாளர்களிடமும் தங்களின் கைவரிசையைக் காட்டி வருகின்றனர்.

10ம் பக்கம் பார்க்க



படிப்பகம்

www.padippakam.com

முதல் பக்கத் தொடர்ச்சி

இதற்கெல்லாம் அவர்களிடம் நன்னெறி கல்வி இல்லாததே காரணமாகும். கடந்த 1972ம் ஆண்டில் நம் நாட்டில் வெறும் 600 போதைப் பித்தர்கள் மட்டுமே இருந்துள்ளனர். ஆனால் கடந்த 1982ல் 14 ஆயிரம் போதைப் பித்தர்களும் 25 வருடங்களுக்குப் பின்னர் 2 லட்சம் போதைப் பித்தர்களும் இருக்கின்றனர். அது போலவே தான் எச்.ஐ.வி எனப்படும் எய்ட்ஸ் நோயாளிகளின் எண்ணிக்கை 12ல் இருந்து 13 ஆயிரம் பேர் வரை இருக்கின்றனர். இந்த எண்ணிக்கையில் இன்னும் எத்தனையோ அடையாளம் காணப்படாத எய்ட்ஸ் நோயாளிகள் சேர்க்கப்படவில்லை.

இந்தியர்கள் மத்தியில் நிலவி வரும் "தற்கொலை" சம்பவங்களும் அதிகரித்து வருகின்றன. பெரும்பாலும் தோட்டப்புறங்களில் மட்டுமே இது அதிகமாக நிகழ்ந்து வருகிறது. ஆகையால் இது போன்ற சமூக சீர்கேடுகளைத் துடைத்தொழிக்க விழிப்புணர்வு கருத்தரங்குகள் தொடர்ந்து நடத்தப் பட வேண்டும்.

இந்தியர்கள் மத்தியில் குறிப்பாக தோட்டப் புறங்களில் கள்ள சம்சு அருந்தும் அல்லது வினியோகம் செய்யும் நடவடிக்கையும் அதிகரித்து வருகிறது. சம்சு அருந்துவது வருத்தமளிக்கக்கூடிய நடவடிக்கையாகும். காரணம் ஒரு வீட்டில் கணவர் சம்சு அருந்தினால் அந்த குடும்பமே பாதிக்கப்படுகிறது. சம்பந்தப்பட்ட பெற்றோர் சம்சு அருந்தி விட்டு பிள்ளைகளையும் மனைவியையும் அடிக்கக்கூடிய சூழ்நிலை ஏற்படுகிறது. இதனால் சம்பந்தப்பட்ட பிள்ளைகள் குறிப்பாக மாணவர்கள் பாதிப் படைகின்றனர்.

அதனால்தான் கல்வியில் இந்திய மாணவர்களின் தரம் வீழ்ச்சியடைந்துள்ளது என்று சற்று முன்பாக எம். ஜி. பண்டிதன் சொன்னார். அதாவது அண்மையில் வெளியான யு.பி.எஸ்.ஆர் தேர்வில் இந்திய மாணவர்கள் 80 விழுக்காடு வீழ்ச்சியடைந்துள்ளனர். அந்த மாணவர்கள் தங்களின் தாய் மொழி உட்பட மற்ற பாடங்களிலும் வீழ்ச்சியடைந்துள்ளனர்.

இந்தியர்கள் மத்தியில் நிலவி வரும் குற்றச்செயல்கள் புறம்போக்கு வீட்டுப் பகுதிகளில் அதிகமாக நிகழ்ந்து வருவதாகவும் அந்த பகுதி மக்கள் கேட்பார் இல்லாமல் விடப்பட்டுள்ளதாகவும் கூறப்படுகிறது. அது உண்மையானால் அவர்களை வேறு இடங்களில் அல்லது அடுக்குமாடி வீடுகளில் குடியேற்றுவதற்கு, சம்பந்தப்பட்டவர்கள் மாநில அல்லது மத்திய அரசாங்கத்துடன் பேச்சு வார்த்தை நடத்த வேண்டும். பேச்சுவார்த்தையின் மூலம் இந்தியர்களிடையே நிலவி வரும் குற்றச் செயல்கள் துடைத்தொழிக்கப்படலாம். ஆகையால் அரசியல்வாதிகள் தொழிலதிபர்கள், இலக்கியவாதிகள் மற்றும் சமய போதகர்கள் ஆகியோர் இந்திய இளைஞர்களை நல்வழிப் படுத்தும் வகையிலான கருத்தரங்குகளை அதிகமாக, குறிப்பாக தோட்ட மற்றும் கிராமப் புறங்களில் நடத்த வேண்டும் என்று டத்தோ மெகாட், ஜுனிட் தமதுரையில் கேட்டுக் கொண்டார்.



படிப்பகம்

# Masalah remaja semakin meruncing

um 2/2/95

Sayangku

Oleh ZANIFAH MD. NOR

KEMELUT sosial dalam masyarakat hari ini dirasakan kian meruncing.

Pergolakan yang kian ketara dan semakin menjejaskan institusi keluarga yang dulunya bebas daripada ancaman penyakit sosial, kini sudah dirasakan semakin bangat bahangnya.

Justeru itu, ekoran daripada masalah remaja yang melanda negara ini, banyak pihak saling bertelingkah menyalahi di antara satu sama lain tentang punca penyakit sosial yang timbul.

